விலைரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 21 றஜப் 9 இதழ் 80

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4—5—82

கடைசிச் செய்தி

## போக்லண்ட்நோக்கி மேலும் 3000 பிரிட்டிஷ் துருப்புகள் விரைவு!

லண்டன், மே. 5

போக்லண்ட் தீவுகளுக்கு பிரிட்டன் மேலும் 3000 போர் வீரர்களை இன்று அனுப்பிவைத்தது.

பிரிட்டிஷ் கடற்படை மீண்டும் இன்று தாக்குதலை ஆரம்பித்தது என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது; சண்டை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

'எலிசபெத்' என்று அழைக்கப்படும் ஒரு கப்பலில் 3000 தரைப்படையினர் இன்று பிரிட்டனிலிருந்து போக்லண்ட் தீவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

### நேரடித் தொடர்பு

(கொழும்பு)

சென்னை விமானநிலையத்திற்கும் இரத்மலானை விமான நிலையத்திற்குமிடையில் நேரடி தகவல்தொடர்பு உபகரணங்களும் 'ரெலிபிறிண்டர்' தொடர்புகளும்நேற்று இணைக்கபபட்டுளளது.

சர்வதேச சிவில் போக்குவரத்து சேவையின் உதவியுடன் இந்த இணைப்பு செய்யப்பட்டது. (க)

### ★ இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட

# ரூ. 40 லட்சம் தங்கம், வைரம்

# மதுரையில் சிக்கியது

### பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தன புரத்திலுள்ள புதிய பாராளுமன்றத்தில் இன்று பிற்பகல் 3மணிக்கு முதலாவது செயல் கூட்டம் ஆரம்பமாகும்.

## பத்தொன்பதுபேர் கைது!

(சென்னை)

கடந்த பத்து ஆண்டுகாலத்தில் நடைபெற்றிருக்காத மிகப்பெரிய தங்க, வைரக் கடத்தலை மதுரை சுங்கப்பகுதியினர் முறியடித்துள்ளனா! இக் கடத்தல்வேட்டையில் இலங்கையிலிருந்து கடத்திவரப்பட்ட பதினெட்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளும், இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வைரக் கற்களும் சிக்கியுள்ளன. பத்தொன்பதுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை நாணயப்படி இதன் மொத்தப்பெறுமதி நாற்பது லட்சம் ரூபாவாகும்.

18லட்சம் ரூபா பெறுமதியான 14 கிலோகிராம் தங்கமும் 2 லட்சம் ரூபா பெறுமதியான 180 புஷ்பராக வைரக் கற்களும் மதுரையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

நாகர் கோவில், திருநெல்வேலி, மதுரைப் பகுதிகளில் கார் ஒன்றைப் பின்தொடர்ந்து சென்று வழிமறித்த சுங்கப்பகுதியினர் இவற்றைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

வைரக் கற்களை ஆசனவாயிலில் மறைத்து வைத்திருந்ததாக மதுரை சுங்க அதிகாரி ஜெயராம் கூறினர்.

கடந்த 10 ஆண்டு காலத்தில் நடந்த மிகப்பெரிய கடத்தல் இதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இச சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட 19 சந்தேக நபர்களும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சுங்கப்பகுதியினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சர்வதேச கிரிக்கெட் திடல் அமைப்பு எதிரொலி:

## ஆனைக்கோட்டைதொல்லியல் ஆய்வுத்தலத்துக்குமூடுவிழா?

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவில் சர்வதேச கிரிக்கெட்திடல் அமைக்கும் முயற்சியால், ஆனைக்கோட்டை தொல்லியல் ஆய்வுத் தலம் நிரந்தரமாக அழிக்கப்பட்டு விடுமோ என்ற ஐயப்பாடு இத்துறை ஈடுபாடுடையோர் மத்தியில் எழுந்துள்ளது!

காக்கைதீவுத் துறையை அடுத்து மண்மேடுகளுடன் காணப்படும் ஆனைக் கோட்டை வயல்வெளியே இதற்காகச் சுவீகரிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

இம் மண்மேடுகள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிடப்பண்பாட்டு எச்சங்களைத் தன்னகத்தே கொண்டவை என்பது 1980ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நடத்திய அகழ்வாராய்ச்சியில் நிறுவப்பட்டது அறிந்ததே.

ஆதிதிராவிடர் குடிகளுக்குரிய பண்பாடாகிய பெருங்கற்பண்பாட்டுக்குரிய ஈமச்சான்றுகள் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக இங்கேயேபெறப்பட்டன. என்பது குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டில் இத்தகைய பண்பாடு சமகாலத்தில் நிலவிய இடங்களாகக் கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகியன கருதப்படுகின்றன. இவற்றுள் கந்த

(8ம் பக்கம் பார்க்க)

### ஆர்ஜென்டீனு கப்பல்

## மூழ்கடிக்கப்பட்டது

லண்டன் மே, 3

போக்லண்ட் தீவுகளில் முற்றுகையிட்ட பகுதிகளில் ஆர்ஜென்டீனுவின் சிறிய ரோந்துக்கப்பலைபிரிட்டிஷ் ஹெலிக்கோப்டர் மூழ்கடித்ததுடன் மற்றுமொரு கப்பலையும் சேதப்படுத்தியுள்ளதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு ஆஜன்டீனு கடற்படைக்கப்பல்கள் பிரிட்டனின் விமானந்தாங்கிக் கப்பல்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததைத்தொடர்ந்து பிரிட்டிஷ் ஹெலிகோப்டர்கள் அக்கப்பல்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

கிழக்குப் போக்லண்ட் வடக்குக் கடல்பிராந்தியத்தில் இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே ஆர்ஜென்டீனுவின் இரண்டு பெரிய யுத்தக்கப்பல்களை பிரிட்டன் சேதப்படுத்தியுள்ளதாக மற்ருெருசெய்தி கூறுகிறது.

ஆர்ஜென்டீனு தனது படை

(8ம் பக்கம் பார்க்க)

## "நாடு சிறப்பாக நடைபெற நீதியான அரசு வேண்டும்"

### திருக்குறளை, மேற்கோள்காட்டி கிளிநொச்சியில் நீதிஅமைச்சர் உரை

(கிளிநொச்சி)

'நாடு சிறப்பாக நடைபெற நீதியுடனுன அரச நிர்வாகம் வேண்டுமெனத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார்'' என்று களிநொச்சிப் புதிய நீதிமன்றத்தை நேற்றுக்காலை திறந்து வைத்துப் பேசுகையில் நீதி அமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்ன கூறினர்.

ஹெலிகொப்டர்மூலம் கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் வந்திறங்கிய அமைச்சரை யாழ்.மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி விஜயக்கூன், அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் வரவேற்றனர். இதன்பின்னர் அமைச்சர் கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட நீதிமன்றத்தைத் திறந்துவைத்தார்.

கிளிநொச்சி நீதிபதி திரு. வி. ஜெகசோதி தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழா வைபவத்தில் நீதியமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்ன உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:.

''நாட்டின் அபிவிருத்திக்கு நீதியமைச்சின் சிறப்பான பணி மிக அவசியம். இதை உணர்ந்து தான் இன்றைய அரசாங்கம் நீதித்துறையில் தீவிர கவனம் செலுத்துகிறது. நீதியமைச்சின் செலவீன ஒதுக்கீடுகளில் தற்போது 40 வீதம் வடபகுதியில்தான் செலவிடப்படுகிறது. சூதன் காரணமாக 10 லட்சம் ரூபா செலவில் இந்நீதிமன்றம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி எம். பி. கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்நீதிமன்றத்தை மாவட்ட நீதிமன்றமாக்கவும் உரிய நடவடிக்கை எடுப்பேன்.''

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி இவ்வைபவத்தில் உரையாற்றுகையில், ''அக்கறையுள்ள அமைச்சரான கலாநிதி விஜேரத்ன உரிய கவனமெடுத்து கிளிநொச்சி மக்ககள் சாவகச்சேரி, யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு அலையாமல் இருக்க இந்நீதிமன்றத்தை மாவட்ட இணைந்த நீதிமன்றமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றும் ''உள்நாட்டலுவல்கள் அமைச்சர் எனது கோரிக்கையை கருத்தில் கொண்டு கிளிநொச்சியில் ஓர் மாவட்ட காணிப்பதிவு அலுவலகத்தை அமைக்க முடிவுசெய்துள்ளார்'' என்றும் கூறினர்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. எஸ். நடராசா, மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கூன் ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

(8 ம் பக்கம் பார்க்க)

## மாவட்ட நீதிபதி

### மயங்கிவீழ்ந்து மரணம்

(கொழும்பு)

கம்பளை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற பிரித் ஓதும் வைபவமொன்றில் உரையாற்றிக் கொண்டிருந்த மாவட்ட நீதிபதி திரு. மகேந்திர எக்நாயக்கா திடீரென மயக்கமுற்று விழ்ந்து மரணமானர்.

மாத்தறையைப் பிறப்பிடமாகக்கொண்ட 52வயதான திரு. எக்கநாயக்கா கம்பளை மாவட்ட நீதிபதியாக கடந்த மூன்று வருடங்களாக கடமையாற்றிவந்தார். (கி)

### இன்று மாலினி மரணவிசாரணை

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் மரணமான மாலினி மகேந்திரனின் மரணவிசாரணை இன்று யாழ். நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெறும்.

### மணிவாக்கு

வானளாவப் பறக்கவேண்டும்; ஆனால் பூமியில் ஊன்றிய கால்களின் உறுதி தளரக்கூடாது.
-டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்.

# நமது நோக்கு

## சுதந்திரத்தின் விலை?

கடந்த வருட ஆரம்பத்திலே இலங்கை உலகில் கடனாகப்பெற்ற தொகை 64 கோடி, 39 லட்சத்து 93 ஆயிரத்து 288 ரூபாவென்று மத்திய வங்கி புள்ளி விபரம் விளக்குகின்றது. கடந்த வருடத்தில் மேலும் எடுத்த கடன் தொகை 1334 கோடி 36 லட்சத்து 89 ஆயிரத்து 970 ரூபாவாகும்.

இப் பெருந்தொகையில் 1334, 36, 89, 970 ரூபாவில் உள்ளூரில் பெற்ற கடன் 644 கோடி 83 லட்சத்து 43 ஆயிரத்து 670 ரூபா; வெளிநாடுகளில் பெற்றது 689 கோடி, 53 லட்சத்து 46 ஆயிரத்து 300 ரூபாவாகும்

பொதுமக்களுக்கு இக் கடன் விபரம் சரியாகப் புரிய முடியாத விடயமாயிருந்த போதும் இலங்கை வேந்தரை நினைவுகூரும் இந்த நாட்களில் ஒருதமிழ் பாட்டில் வரும் ஒரு அடி நினைவுக்கு வருவது இயல்பே. ''கடன்பட்டார் நெஞ்சம் போலே கலங்கினான் இலங்கை வேந்தன்'' என்பது அப்பாட்டின் குறிப்பிட்ட அடி.

இன்று இலங்கையில் மன்னர் ஆட்சி மறைந்த போதும் ஜனநாயக ஆட்சி முறையில் ஈடுபாடுகொண்ட நாட்டின் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களை ஒரு வேந்தனாக மதிக்கும் சூழ்நிலை உருவாகுவதை நாம் கவனிக்கமுடிகிறது.

ராஜாங்க அமைச்சர்திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கோட்டே பாராளுமன்ற திறப்பு விழாவில் நிகழ்த்திய பேச்சு இந்த நாடு கண்ட சிங்கள மன்னரின் சிறந்த ஆட்சியின் மகிமை வந்துள்ள பெருமிதத்தை வெளிப்படுத்தியது.

மக்கள் ஆணையென்ற பல்லவியை இடைக்கிடை பாடிக்கொண்டு கோட்டேயிலிருந்து – ராஜாங்க அமைச்சரின் கோட்டே – நாட்டை ஆட்சிபுரியஎல்லா வசதிகளும் ஏற்பட்டுள்ளதாக களிப்புவகையில் நீந்தினார்.

உணர்ச்சி வசப்பட்ட ராஜாங்க அமைச்சர் நகைச்சுவையின் பேரினால் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழரசு அமைக்கவேண்டிய காலகட்டத்தில் சிங்கள அமைச்சர் ஒருவரை – குறிப்பாக கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில்மதியு அவர்களை இங்கு அனுப்பச் சித்தமுடையவராக இருப்பதாகவும் கூறினார். அதில் ஒரு பொல்லாப்புமில்லை.

நாட்டின் அபிவிருத்திக்கென உலகிலும் உள்ளூரிலும் கையேந்திக் கடன் வாங்கும் அரசு இவ்வளவு தூரம் நாம் நாட்டை ஈடு வைத்திருக்கிறோமே இதனை மீட்பது யார்? அபிவிருத்தி மக்கள் அடையும் பயன் இக்கால எல்லைக்குள் சாத்தியமா? கடந்த வருடத்தில் இத்தகைய பாரதூரமான பெருந்தொகை தேவைப்பட்டதன் காரணம் மக்களுக்கு விளக்கப்பட்டிருக்கிறதா! மகாவலித்திட்டத்தின் கால எல்லைக்கடங்கிய எதிர்பார்ப்புகள் தவறிவிட்டது உண்மையா? இவ்வித பெருங்கடன் தொகைகள் அபிவிருத்திக்கு உதவும் திட்டங்களில் ஒப்பந்தக்காரரின் சூழ்ச்சிகளில் அமைச்சுகள் அகப்பட்டிருக்கிறதா?

'பெருங்கடனாளி' இலங்கை என்ற அவப்பெயர் உலகெங்கும் பரவ வழியிருக்கையில் நாம் எந்த நாடுகளின் ஆதிக்க வலையில் அகப்பட்டு அந்தரப்படப் போகின்றோம்? இக்கேள்விகள் மக்கள் மனத்தை வாட்டத் தொடங்கியதை அரசு அறியாதா?

அந்நிய ஆதிக்கம் எதுவுமின்றி நாமிந்த பொருளாதார நெருக்கடியில் மேலும் கடன்பெற்று சுதந்திரமாக வாழவழிபிறக்குமா?

இந்த ஆட்சி எல்லோருக்கும் எல்லாவிதமான சுதந்திரத்தை வழங்கியிருப்பதாக ஜனாதிபதி பெருமைப்படுகிறார். எவருக்கு என்ன சுதந்திரம் இல்லை என்றால் அதனை வழங்கவும் முன்வந்திருக்கிறார்.

இலங்கை மக்கள்– குறிப்பாக ஏழைமக்கள் சார்பாக இந்தக்கடனாளி நிலையிலிருந்து தப்பி வாழவழிகாட்டுங்கள் என்பதே எமது கோரிக்கை.

# செய்திக்கொருசெல்லத்துரை

வீரகேசரி யாழ்ப்பாண விசேடநிருபர் அமரர் எஸ். செல்லத்துரையின் மறைவு கேட்டு கலங்காதபத்திரிகை வாசகர் எவரும் இலர்.

அரைவயதிலேயே தமது வாழ்க்கை யாத்திரையை முடித்துக்கொண்ட அன்பர், பத்திரிகை உலகுக்கு– தமிழ்வாசகர்களுக்கு ஒரு அரிய கொடைபோல பணிபுரிந்தது எங்கும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உறுதிகொண்ட கருத்தாகும்.

செய்தியைச் செய்தியாக, அதன் வாசகர்களை தம்முடைய பொறுப்புணர்ச்சிக்குப் பாத்திரமானவர்களாக; செய்தி உருவெடுத்து அச்சேறும்வரையில் இடம்பெறும் பலவித நாடகங்களில் திறம்பட நடிக்கும் ஆற்றல்பெற்றவராக, எந்தச் சந்தர்ப்பத்திலும் சமத்துவ புத்தியைக் கைவிடாத சமநோக்குடைய சான்றோனாக கடமைபுரிந்தவர் அன்பர் செல்லத்துரை.

ஒரு சாதாரண நிருபரில் இத்தகைய நிபுணத்துவம் இருப்பதை அறிந்தவர் பலர்; அறியாதவர் சிலரிலும் சிலரே!

ஒழுக்கத்துடனும், தியாக உணர்வுடனும் தமது கடமையை திறம்படப்புரிந்த செய்தி ஆசான், தரமான ஒரு தினசரியின் செய்தி ஆசிரியருக்குரிய திறமை பெற்றவர்.

காட்டிலே பூத்த பூப்போல பல தருணங்களில் காட்சிபுரிந்த அவர் பல அரசியல் தலைவர்களின் நெளிவுவளைவுகளை நிமிர்த்தி ஆளாக்கிய பெருமை உடையவர்,

அன்னாருடைய குடும்பத்தினர் தமது தலைவனை இழந்து பரிதவிக்கும் இவ்வேளையில் பத்திரிகைத் துறையில் நிலைத்த இடம் பெறவேண்டிய உழைப்பாளியின் கதி என்ன என்பதே எமது பிரலாபம்.

நினைக்க நடுக்கம்பிடிக்கும் இந்தநிலைக்கு நிவாரணம் அளிக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் அமரர் செல்லத்துரையின் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்க உதவவேண்டும்.

# உண்மைகளும் போலிகளும்

## பி. எஸ். செட்டியார்

''என் ஆத்ம திருப்திக்காகவே நான் நாட்டியம் ஆடுகின்றேன்'' இலங்கை வானொலியில் பத்மா சுப்பிரமணியம் அருந்ததி ஸ்ரீ ரங்கநாதனுக்கு அளித்த பேட்டியில் கூறிய பதில் இது.

''இக்கட்டான'' கேள்விகளுக்கு கச்சிதமாக, ஆனால் அடக்கம்பண்புடன் பத்மா அளித்த பதில்களும் விளக்கங்களும் சுவாரஸ்யமாக விருந்தன. தொடர்ந்து கேட்டேன் ஞாபகத்திலுள்ளவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். கலைமணம் கமழும் மயிலையில் புகழ்பெற்ற சினிமா டைரக்டர் சுப்பிரமணியத்தின் மகளான பத்மா பரதநாட்டியம் பயில்வதற்கேற்ற சூழ்நிலையில் வளர்ந்தார். ஒரு கலைக்கூடம் போன்றிருந்தது அவர் வீடு. தகப்பனாருக்கு நாட்டியத்துறையில் மிகுந்த ஈடுபாடு. ஆனால் அதில் பிரவேசிக்க முடியாதபடி அவரது தகப்பன் தடுத்துவிட்டார். இதன் காரணமாகத் தமது அடக்கப்பட்ட ஆசை அபிலாஷைகளைத்திசை திருப்பித் தமது மகள் மூலம் மன நிறைவெய்தினார். இயற்கையாகவே நாட்டியக் கலையில் விருப்பமுள்ள பத்மா நாட்டின் தலைசிறந்த நாட்டியக் காரருள் ஒருவராக, பரதநாட்டியத்தின் பழைமையைப் பேணி புதுமையைப் புகுத்தித் தொண்டாற்றி வருகிறார். அவருடைய பள்ளிக்கூடத்தில் இலங்கைமாணவர்கள்கூட பயிற்சிபெற்று வருகிறார்கள், ''உங்களுக்கென்றே தனித்து ஒரு பாணியை உருவாக்கி வருகிறீர்களா?'' என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில் பரிசுத்தமானது; 'ஆண்டவன் கையில் நான் ஒரு கருவி' என்று ஆங்கிலத்தில் பதிலளித்தார். இடையிடையே ஆங்கிலப் பதங்களை அவர் பாவித்ததுதான் இந்தப் பேட்டியில் உள்ள ஒரேயொரு குறைபாடு. தமிழ் நாட்டில் இது சகஜமாகவிருக்கலாம். ஆனால் பாரதிநூற்றாண்டு கொண்டாடு இவ்வேளையில் ''இயன்றவரை தமிழிலே சிந்திப்பேன்; பேசுவேன்; எழுதுவேன்'' என்ற பாரதியின் பிரதிக்ஞையை பத்மாவும் கடைப்பிடித்தல் நல்லது.

''ஆண்டவன் கையில்நான் ஒரு கருவி; என் ஆத்மதிருப்திக்காகவே நான் நாட்டியம் ஆடுகின்றேன்'' என்ற பதில்கள் என்சிந்தனையைக் கிளறிவிட்டன.

பரதநாட்டியத்தை ஒரு தெய்வீகக் கலையாக மதித்து ஆத்மதிருப்திக்காக இன்று ஆடுபவர்கள் வெகுசிலரே. பரதநாட்டியம் இன்று ஒரு 'பாஷன்' ஆகிவிட்டது. கல்யாணச் சந்தைக்கு அதுவொரு நுழைவுச்சீட்டு. பெண்ணுக்குப்பாடத் தெரியுமா? வீணை வாசிப்பாளா?' என்பதற்குப் பதிலாக பெண்ணுக்கு ஆடத்தெரியுமா என்பதற்கு பதிலாக அரங்கேற்றம் முடிந்து விட்டதா?' என்று கேட்பது' இன்றைய வழக்கம். தடிபிடித்தவர் எல்லோரும் தண்டேல் அல்ல; பேனா பிடித்தவர்களெல்லாம் எழுத்தாளர்களல்ல; சதங்கை அணிந்தவர்களெல்லாம் நடனமாடுவோருமல்ல. முன்னரெல்லாம் கலாக்ஷேத்திரம்போன்ற போன்ற கலைக்கூட்டங்களில் நாட்டியம் பயிலச் செல்வோரின் அங்கலட்சணங்கள், முகபாவங்கள் ஆகியவை திருப்திகரமாயிருந்தால்தான் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் இன்றோ கலைக்கூடங்கள் காளான்கள் போல் முளைத்துவிட்டன. ஆகக்குறைந்தது ஆறுவருடங்கள் பயின்று பெறவேண்டிய 'டிப்புளமாக்கள்' இன்று ஆறுமாதங்களில் கொடுபடுகின்றன. ஆறுமாதப் பயிற்சியுடன் ஒரு அரங்கேற்றம்; அதன் பிறகு கலாநிதி, நாட்டியமேதை என்ற இன்னோரன்ன பட்டங்களையும் மகுடங்களையும் தாமே தமக்கு சூட்டிக் கொள்ளுதல்: அல்லது யாரேனும் ஒரு பெரும்புள்ளியைக் கொண்டு பரதநாட்டியத்தைப்பற்றி அவருக்குத் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை– வழங்குவித்தல்; முடிவாகத் தமக்கென ஒரு 'புதிய பாணி'யை உருவாக்கி, கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' தானும் அதுவாகப் பாவித்து ஆடினாற்போல் பரதக் கலையைக் கொலை செய்தல்.

இது நிற்க,

### பாரதி இன்றிருந்தால்

''ஆண்டவன் கையில் நான் ஒரு கருவி'' என்ற சரணாகதி மனப்பாங்கு சமயத்துறைக்கு என் சிந்தனையைத் திருப்பியது. அன்று பாரதி நெஞ்சம் குமுறிச் சொன்னான்;

''மக்களிடையே இன்று பரவிவரும் ஆன்மீக ஸ்தாபனங்களில் முக்காலே மூனு வீசமும் ஆஷாடபூதிகள், உருத்திராக்கப்பூனைகள், கபட சந்நியாசிகள் ஆகியோரால் இலகுவாகப் பணம் சம்பாதிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட மார்க்கங்களேயாம்.''

இன்று பாரதி இருந்தால் இயேசுநாதர் தடிகொண்டு தேவாலயத்தினுள் வியாபாரம் செய்தோரை விரட்டியடித்து வெளியேற்றியதுபோல் கபட சந்நியாசிகளின் காவிவஸ்திரங்களைக் களைந்தெறிந்திருப்பார். ஆதிசிவன் முக்கண்ணைத் திறந்தான்; காமன் பஸ்பமானான். இன்றைய சிவயோகிகள் பஞ்சைப்பஸ்மாக்கி குறளி வித்தை செய்கிறார்கள். ஊசி முனை மீது ஒற்றைக்காலில் பன்னிரண்டுவருடங்கள் நின்று அருச்சுனன் கடுந்தவம் புரிந்து பாசுபதம் பெற்றான். இன்று ஊசி மூலம் 'இன்ஜெக்ஷன்' கொடுத்து ஆத்மீக சக்தி வழங்குகிறார்கள், பகுத்தறிவு கொண்ட ஆஸ்திகன்கூட இன்றைய பொம்மலாட்டங்களைப் பார்க்கும்போது நாஸ்திகனாக மாறிவிடுவான். சித்துக்களைக் கண்டு ஏமாற வேண்டாமென்று தாயுமானவர் பாடுகிறார்;–

''கந்துக் மதகரியை வசமா நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேற்கொள்ளலாம்;
கட்செவி எடுத்து ஆட்டலாம்;
வெந்தழலில்இரதம் வைத்து ஐந்துலோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்;
சந்ததமும் இளமையோடிருக்கலாம், மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்.
சலமேல் நடக்கலாம்; கனல் மேல் இருக்கலாம்:
தன்னிகரில்சித்திபெறலாம்:
சிந்தையை 'அடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது: சத்தாகி என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே!

அறிவானதெய்வமே! என்று விளிக்கிறார். தாயுமானவர். அந்த அறிவுக்கு விளக்கம் கொடுக்கிறார். பாரதி: ''சாதாரண அறிவே பரமமெய்ஞான மாகும். சாதாரண ஞானத்தைக் கைக்கொண்டு நடத்தலே எதிலும் எளியவழியாம். சாதாரண ஞானமென்று சொல் மாத்திரத்தில் அது எல்லாருக்கும் பொதுவென்று விளங்குகிறது. ஆனால் சாதாரணஞானத்தின்படி நடக்க எல்லாரும் பின்வாங்குகிறார்கள். சாதாரண ஞானத்தின் தெளிவான கொள்கை யாதெனில் 'நம்மை மற்றோர்நேசிக்க வேண்டுமென்றால் நாம் மற்றோரை நேசிக்க வேண்டும்'' என்பது. அன்பே அன்பைவிளைவிக்கும்.

''இயற்கை விதியை அனுசரித்து வாழவேண்டும். அதனால் எவ்விதமான தீமையும் எய்தமாட்டாது. எனவே சாதாரண புத்தியேபரமமெய்ஞானம். இதனை ஆங்கிலேயர் ''கொமன் சென்ஸ்'' என்பர். சுத்தமான—மாசுபடாத, கலங்காத, அஞ்சாத, பிழைபடாத— சாதாரண அறிவே பரம மெய்ஞ்ஞானமாகும்,,.

(அ)

# மக்கள் கருத்து

## அகிம்சை ஆயுதம்

கடந்த ஞாயிறு (2-5-82) அன்று ஈழநாடு பத்திரிகையில் வெளியாகியிருந்த திரு. எஸ். சிவசேயோனின் கருத்து எனக்குகவலையையும் அதிர்ச்சியையும்கொடுத்தது.

அவரின் கூற்று பின்வருமாறு:

''காந்தியின் அஹிம்சை மூலம்தான் இந்தியா விடுதலை பெற்றது என்று கூட்டணியினர் பிரசாரம்செய்கிறார்கள். காந்தியின் அஹிம்சையால் பாரதத்திற்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. பகவத்சிங், சுபாஸ்சந்திரபோஸ் போன்ற தீவிரவாதிகளின் வன்முறைகளுக்கு ஈடுகொடுக்கமுடியாத பிரிட்டிஷ் அரசு பாரதத்திற்கு சுதந்திரம் வழங்கியது. வன்முறையினால்தான் பாரதத்திற்கு சுதந்திரம் வழங்க வேண்டியநிலை ஏற்பட்டதென்பதை உலகுக்கு காட்டி தங்கள் சுயகௌரவத்தை இழக்க விரும்பாத பிரிட்டிஷார் காந்தியின் அஹிம்சைக்காக சுதந்திரம் வழங்கியதாக கதையை மாற்றினார்கள்.''

அண்ணல்காந்தி தென்னாபிரிக்காவில் இருந்து எத்தனையோ சாதனைகளை தனது அஹிம்சையால் சாதித்தார். அப்போதும் அங்கே சுபாஸ் சந்திரபோஸும்பகவத்சிங்கும் வன்முறை நடத்தினார்களா?

எதற்கும் இந்திய தேசிய ராணுவத்தைப் பற்றி சிறிது பார்ப்பது நல்லது. இரண்டாவது உலகப் போரின்போது இந்தியாவிலிருந்து திடீரென மறைந்துவிட்ட ஸ்ரீசுபாஸ்சந்திரபோஸ் எப்படியோ ஜெர்மனிக்குப்போய் அங்கிருந்து ஜப்பானுக்குச் சென்றுவிட்டார்! மலேயா ஜப்பானியரிடம் பிடிபட்டதும் அங்கு யுத்தக்கைதிகளாக பிரிட்டிஷார் விட்டுப்போன இந்திய ராணுவத்தினரையும் மலாயா வாழ் இந்தியரையும் கொண்ட ராணுவத்தை திரட்டி, பர்மா வழியாக இந்

(8ம் பக்கம் பார்க்க)

# போக்லண்ட் பிரச்னை தீர்வுக்கு ஐ. நா. முயற்சி!

நியூர்யோர்க் மே 3

போக்லண்ட் தொடர்பாக ஆர்ஜென்டீனாவுக்கும் பிரிட்டனிற்குமிடையில் ஏற்பட்டிருக்கும் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவர ஐ நா. தலைமைச் செயலாளர் மாற்று வழிகளை ஆராய்ந்து வருகிறார்.

போக்லண்ட் தீவுகளில் நேற்று எந்தவிதமான மோதலும் இடம்பெறவில்லை.

போக்கண்ட் சமரசப் பேச்சுக்கு இடமுண்டு என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் போக்கலண்டிலிருந்து ஆர்ஜென்டீனா இராணுவம் வெளியேற மறுத்தால் பிரிட்டிஷ் படைகள் விரட்டியடிக்கும் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. பிம் தெரிவித்துள்ளார்.

திரு. பிம் அமெரிக்கா ராஜாங்க அமைச்சர் திரு. ஹெய்க் உடன் சமரசப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார். ஐ. நா. செயலாளரையும் இன்று சந்தித்து சமாதானம் குறித்து விரிவான அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

பிரிட்டிஷ் யுத்த விமானங்களான 5 கரியர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும் பிரிடடிஷ் விமானம் தாங்கிக்கப்பலான ஹேர்ம்ஸை நாசப்படுத்தியதாகவும் ஆர்ஜென்டீனா அறிவித்துள்ளது. ஆனால் இதை பிரிட்டன் முற்றாக மறுத்துள்ளது. பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. பிம் இன்று ஐ. நா. செயலாளரைச் சந்திககின்ற போதும் ஐ. நாவின் பங்களிப்பை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் விரும்பவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

போக்லண்டில் சமாதானத்தையேற்படுத்தும் நோக்குடன் ஐ நா. அமைதிகாக்கும் படையை போக்லண்ட் தீவுகளுக்கு அனுப்பி வைக்கலாமெனவும் போக்லண்ட் தீவுகளின் இடைக்கால நிர்வாகம் பற்றியும் மாற்று வழிகளை ஐ நா. தெரிவிக்கலாம் எனவும் அறியவருகிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஹெய்க்குடன் பேச்சுவார்த்தை நடத்த வாஷிங்டன் சென்றிருந்த பிரிட்டிஷ் வெளி விவகார அமைச்சர் திரு. பிம் பத்திரிகையாளர் மாநாடொன்றில் ''பிரிட்டன் ஐ. நா. வின் தீர்வை விரும்புகிறது என்று வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் சம்பந்தமாகவும், சமாதானயோசனைகள் குறித்தும் மாறுபட்ட கருத்துக்கள் அடிக்கடி வெளி வந்துகொண்டிருக்கின்றன. (கு)

## மே தினத்தில்வன்செயல்கள்

லண்டன் மே 3

மே தினமான நேற்று முன் தினம் உலகின் பல பாகங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் தலை தூக்கியதாக அறிவிக்கப்பட்டது.

போலந்தின் தலைநகரான வார்சோவில் ஊர்வலங்களுக்கு நேற்று முன்தினம் தடைவிதிக்கப்பட்டபோதும் அத்தடையையும் மீறி சுமார் 50,000 பேர் இராணுவ அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போர்த்துக்களில் மே தினத்தன்று அந்நாட்டின் படைகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் சிலர் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெயினில் சோஷலிஸ கட்சி அலுவலகம் குண்டுவீசி தகர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (வெ)

## பாரதஜனாதிபதி வெளிநாடு விஜயம்

புதுடில்லி, மே. 3

இந்திய ஜனாதிபதி நீலம் சஞ்சிவரெட்டி அயர்லாந்து, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகலில் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு பயணமானார். ஒருவார காலத்தில் அவர் நாடு திரும்டவார். ஜனாதிபதியுடன் கப்பல்போக்குவரத்து அமைச்சர் திரு. வீரேந்திரா பட்டீலும் செல்கிறார்.

அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜய மொன்றை மேற்கொள்ள இருந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மாநில சட்ட சபைத் தேர்தல் காரணமாக தனது பிரயாணத்தை காலவரையின்றி ஒத்திவைத்துள்ளார். (கு)

## ''அணு ஆயுதத் தாக்குதலில் நம்பிக்கை வைப்பது பைத்தியக்காரத்தனம்;''

மாஸ்கோ, மே 3

'அமெரிக்காவின் உயர் அதிகார வட்டாரங்களில் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன என்பது நாளுக்கு நாள் வெளிப்படையாகத் தெரிகிறது' என்று சோவியத் ஏடா 'பிராவ்தா' எழுதியுள்ளது.

'அணு ஆயுதங்களைக் கொண்ட முதலில் தாக்கும் கருத்தை அமெரிக்க ராணுவ தளபதிகள் நெடுநாளாக ஆதரித்துவருகின்றனர், அணு ஆயுங்களைக்கொண்டு முதலடி கொடுக்கும் யோசனையைக் கைவிடுதல், ஆயுத பலத்தை இப்பொழுது உள்ள அளவிலேயே உடனடியாக நிறுத்துதல் முதலியவற்றை அமெரிக்காவின் சாதாரண மக்கள் பட்டுமன்றி அண்மைக்காலம் வரை பதவியில் இருந்தவர்களும் மேன்மேலும் அதிகமாக வலியுறுத்திவருகின்றனர்' என்றும் பிராவ்தா எழுதுகிறது.

'அமெரிக்காவிலும் நேட்டோவிலும் உயர் பதவி வகிப்பவர்களில் அதிக எண்ணிக்கையினர், ராணுவ அபாயத்தை உணர்ந்துவருகின்றனர். இதற்கு உதாரணமாக செனட்டர் கென்னடியும், செனட்டர் ஹாட் ஃபீல்டும், அணு ஆயுதங்களை இப்பொழுது அளவிலேயே தடுத்து நிறுத்தவேண்டும் என்று கூறியதையும், இந்தப் பிரேரணைகளை நாடாளுமன்ற உறுப்பினர் பலர் ஆதரித்ததையும் நினைவுபடுத்திக் கொண்டால்போதும். ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் படைக் குறைப்பு நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பால் வார்ன்கே, அமெரிக்காவின் முன்னாள் அயல்துறை அமைச்சர் சைரஸ் வான்ஸ் முதலிய பிரபல அமெரிக்கப் பிரமுகர்கள் அணு ஆயுதப்போட்டியை நிறுத்துமாறு கோரிக்கைகள் விடுத்திருக்கின்றனர். அணு ஆயுதங்களைக் கொண்டு முதலடி கொடுப்பதில் அடங்கியுள்ள பேரபாயம் பரவலாக உணரப்பட்டுள்ளது என்பது, அணு ஆயுதப் போட்டியை எதிர்த்து அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் ஆகியவை உட்பட உலகம் முழுவதிலும் பெருங்கிளர்ச்சிகள் நடைபெறுவதிலிருந்து தெரிகிறது. அணு ஆயுதத் தாக்குதலின் வெற்றியில் நம்பிக்கை வைப்பதுபைத்தியக்காரத்தனம் என்பதை கோடிக்கணக்கான மக்களுக்குப் பகுத்தறிவு உணர்த்துகிறது' என்றும் 'பிராவ்தா' எழுதியுள்ளது.

## வடிசாலை தீயில் நாசம்

மதுரை, மே 3

மதுரையிலுள்ள ஐயாதாம் பேட்டையில் சாராயவடிசாலை திடீரென தீப்பற்றி நாசமானது. இந்த விபத்தினால் சுற்றுப்புறத்திலும் தீபரவி பெரும் சேதாரத்தை ஏற்படுத்தியது.

## வருமானம் அதிகரிப்பு

மதுரை மே. 3

மதுரைமீனாட்சி அம்மன் ஆண்டு வருமானம் வருடந்தோறும் அதிகரித்துவருகிறது. கடந்த ஆண்டு 40 லட்சம் ரூபாவாக இருந்த வருமானம் இந்த ஆண் ஒரு கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. (கு)

## ஆர்ஜன்டீனாவிடம் பிரிட்டன் படு தோல்வி

லிஸ்பன், மே. 3

பிரிட்டனுக்கும் ஆர்ஜென்டீனாவுக்குமிடையே போர்த்துக்கலில் நடைபெற்ற 'ரோலர் ஸ்கேட்டிங்' ஹாக்கிப் போட்டியில், ஆர்ஜென்டீனா, பிரிட்டனை 8–0 என்ற ரீதியில் படுதோல்வியடையச் செய்தது!

போக்லண்ட் தீவுப்பிரச்னை சம்பந்தமாக மேற்படி இரு நாடுகளும் மோதலில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளை ஆர்ஜென்டீனாவின் இவ்வெற்றி அதற்குப் பிரபல்யத்தைத் தேடிக் கொடுத்துள்ளது.

இப்போட்டி நடைபெற்ற அரங்கில் ஆர்ஜென்டீனா ஆதரவாளர்கள் தமது நாட்டுக் கொடிகளை ஏந்தியபடி தமது விளையாட்டுவீரர்களை உற்சாகப்படுத்தியதுடன், போர்க்லண்ட்டை ஆக்கிரமிக்க முற்படும் பிரிட்டனைக் கண்டிக்கும் வகையிலும் கோஷங்களை எழுப்பினர்.

பிரிட்டிஷ் ரர்ஜதந்திரிகள் மேற்படி போட்டியைப் பார்வையிட அரங்கிற்கு வந்திருக்கவில்லை. ஆயினும் ஆர்ஜென்டீனா தூதரகத்தைச் சேர்ந்தோர் பெருமளவில் கலந்து கொண்டனர்.

பிரிட்டனின் பயிற்சியாளர் திரு. ஜியோவ்விற் இதுபற்றித் தெரிவிக்கையில்; தனது விளையாட்டுக்குழுவினர், கடந்த இருபது வருடங்களாக இவ்விளையாட்டில் முன்னணி வகிக்கும் ஆர்ஜென்டீனா, போத்துக்கல், ஸ்பெயின் போன்ற நாடுகளை வெல்லும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

ரோலர் ஸ்கேட்டிங் ஹாக்கி என்னும் மேற்படி விளையாட்டின் வீரர்கள் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பாதணிகளை அணிந்துகொண்டே விளையாட்டில் ஈடுபடுவர். இவ்விளையாட்டின் விதிமுறைகள் ஹாக்கி விளையாட்டுப் போன்றதே.

விளையாட்டுப் போட்டி நடந்த வேளை போர்த்துக்கல் பார்வையாளர்கள் பிரிட்டனுக்கே ஆதரவளித்தனர். இந்த ஆதரவுக்கு ஆரஜன்டீனா கோஷ்டி போர்த்துக்கல்கோஷ்டியை தோற்கடிக்கும் திறமை பெற்றிருப்பதே காரணமாகும். (கி)

## ''அப்பிள்'' திறம்பட இயங்குகிறது

பெங்களூர் மே, 3

''அப்பிள்'' செயற்கைக் கோள் திறம்பட இயங்குவதாக பங்களூர் விண்வெளி ஆராய்ச்சிக் கட்டுப்பாட்டுநிலையம் அறிவித்துள்ளது. சில இடங்களைப்பற்றிய டெலிவிஷன் படமும் அனுப்பியுள்ளதாம். (கு)

## இந்தியா முன்னணி

புதுடில்லி மே 3

பூச்சி கொல்லித் தயாரிப்பில் வளர்முக நாடுகளில் இந்தியா மூன்னிற்கிறதென செய்திகள் தெரிவிக்கின்றன. 48 விதமான பூச்சிக் கொல்லிகள் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ளனவாம். (கு)

## பொலிஸார் தாக்கியதாக தொழிற்சங்கம் புகார்!

(யாழ்ப்பாணம்)

''இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்கபொது சேவை தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்திய மேதினக் கூட்டத்திற்கு முன்பு பொலிசார் நடந்து கொண்டவிதம் மிகவும் கண்டனத்திற்குரியது மல்லாமல் காட்டுமிராண்டித்தனமான செய்கையாகும்'' இவ்வாறு, லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் மாவட்டசெயலாளர் திரு.எஸ். விஜயானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அறிக்கை மேலும் கூறுவதாவது:

நெல்லியடிச் சந்தியில் மேதினப் பொதுக்கூட்டத்திற்கு வாகனங்கள் மூலம் வந்திறங்கி கூட்டத்தில் பங்கு கொள்ள. செல்லவிருந்த தொழிற்சங்கத் தலைவர்களையும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களையும் பொலிசார் விறகுதடி கொண்டு தாக்கிய செயல் பற்றி அரசாங்கத்திற்கும் பொலிஸ் மா அதிபருக்கும், தொழிற்சங்கங்களும் ஏனைய வெகுஜனஸ்தாபனங்களும் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க தீர்மானித்துள்ளன.

''முன்னறிவித்தலோ முன்னெச்சரிக்கையோ கொடுக்காமல் அங்கு நின்றிருந்த தலைவர்கள் மூலம் கலைந்து செல்லும்படி வேண்டுகோள் விடுக்காமலும், திடீரெனத் தாக்கியது மனிதாபிமானமற்றது. இச் செய்கை பொலிசார் மீது எக்கால கட்டத்திலும் நல்லுறவை ஏற்படுத்த முடியாது. மாலி சந்தி மைதானத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேச்சாளர்கள் இனி வரும் பொலிசாரின் நடத்தையை வன்மையாகக் கண்டித்ததையும், மக்கள் கரகோஷித்து வரவேற்றதையும் நாம் ஏற்றேயாகவேண்டும்.''

## புராதன நாகரிகம்

(யாழ்ப்பாணம்]

புராதன நாகரிகம், $250^0$ ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் இருந்திருக்கிறதென்று பென்சில்வேனியா பல்கலைக்கழகப் புதைபொருள் ஆராய்ச்சிக் குழுவினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

1970ம் ஆண்டு கந்தரோடையில் காணப்பட்ட புதைபொருட்களை ஆராய்ந்த பின்னரே இக்கருத்தை அவர்கள் வெளியிட்டுள்ளனர். (கு)

## போலந்தில் தடை உத்தரவைமீறி ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

வார்சோ மே 3

போலந்து சொலிடாறிற்றி சுதந்திர தொழிற்சங்க சம்மேளம் பொலிசாரின் தடை உத்தரவையும் மீறி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை மீண்டும் இன்று நடத்தியது.

சொலிடாறிற்றி சுதந்திரத் தொழிற்சங்கச் சம்மேளனம் மேதினத்தன்று பொலிசாரின் தடை உத்தரவையும் மீறி ஊர்வலம் நடத்தியிருந்தது தெரிந்ததே.

வார்சோவில் பொலிஸ், இராணுவ ரோந்து பலப்படுத்தப்பட்டுள்ளது. படைகள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

போலந்து நிர்வாகத்தை இராணுவம் கையேற்ற பின்னர் வானொலி அறிவிப்பாளர்கள் இராணுவ உடையில் வாசிப்பது வழக்கம். ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக சாதாரண உடையணிந்து வானொலி அறிவிப்பாளர் செய்திகளை வாசித்தார். (கு)

## இன்று நினைவுதினம்

# நிதித்துறையில் சர்வதேச புகழ் ஈட்டிய பெருமகன்

--பரமேஸ்வரி கார்த்திகேசு--

பிரபல சமூக, பொருளியல் நிதி நிபுணரான அமரர் செல்லையா லோகநாதனின் முதலாண்டு நினைவுதினம் இன்று அன்னார் தமது இறுதி மூச்சுவரை ஊழியம் கருதாது எமக்களித்த தன்னலமற்ற ஒப்பரிய சேவையை நினைவுகூருவது மிகப் பொருத்தமான தொன்றுகும்.

இலங்கை வங்கி, இலங்கை அபிவிருத்திநிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கி, பிலிப்பைன்ஸ் அபிவிருத்தி வங்கி, சர்வதேச வர்த்தக சம்மேளனம் போன்ற பல நிறுவனங்களில் பல்வேறு மிகமுக்கிய உயர்பதவிகளை வகித்து அங்கெல்லாம் அவைதிறம்படச் செயலாற்றப்புதுமைகொண்ட செயல்முறை, தொழில்நுட்ப வழிவகைகளை உருவாக்கி ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஆசிய மக்களின் சமூக பொருளாதார விடிவுக்காக பற்பல வழிகளிலும் ஒப்புயர்வற்ற சேவைகளாற்றியதுடன் ஒரு தலைசிறந்த பேச்சாளராகவும் பிரபல பொருளாதார நிதிசம்பந்தமான வெளியீடுகளின் சிருஷ்டிகர்த்தாவாகவும் விளங்கி எமது நாட்டுக்கு சர்வதேச புகழ்ஈட்டியமை யாவரும் அறிந்ததே. அன்னாருடைய சொந்தக்கருத்துக்களை தெளிவுபடுத்தி அவர் எழுதியுள்ள பல்லாயிரக்கணக்கான வார்த்தைகளும் வழங்கியுள்ள ஆலோசனைகளும் சமூக பொருளாதார அறிவியற் பொக்கிஷங்களாகவும் வங்கித்துவத்தைச் சீரமைக்கும் மூலாதாரமாகவும் ஏன் முகாமையாளர்களின் கொள்கைகளைக்கூட அடியோடு மாற்றியமைக்கும் சக்திவாய்ந்த வெளியீடுகளாயும் உலகெங்கும் செல்வாக்குப் பெற்றுள்ளன.

### சொகுசுகளைத் துறந்தார்

உலகின் பல பாகங்களிலும் ஒப்பரிய சேவைகளாற்றி ஓய்வுபெற்ற அப்பெருந்தகை தனது இறுதி நாட்களிலேனும் தான் சம்பாதித்துக்கொண்டு சகல சௌகரியங்களுடனும் இளைப்பாறி நிம்மதியாக வாழ்வை அனுபவிக்க விரும்பவில்லை. தள்ளாத வயதிலும் தன் தாய் நாட்டுப்பற்றுல் உந்தப்பட்டு அதன் சமூக பொருளாதார சுபீட்சத்துக்கு வழியமைக்க விழைந்தார். சொகுசுகள் யாவற்றையும் துறந்தார். தனிமனிதனுக எமது வாழ்வு வளம்பெற பலதிட்டங்கள் வகுத்தார். அவற்றைச்செயற்படுத்த இரவென்றும் பகலென்றும் பாராது ஓடியாடிப்பாடுபட்டார். அவரது ஒவ்வொரு நடவடிக்கையும் பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள மக்களின் நிலையையிட்டு அவர் மனம் எவ்வளவு தூரம் பாதிப்புற்றிருந்தது என்பதையும் அவறறை மேம்படுத்த ஒவ்வொரு பிரஜைக்கும் எந்த அளவுக்குக் கடமையுள்ள தென்பதையும் எமக்குஉணர்த்தியது. எம்மிடையே அசட்டை நிலையைத் தவிர்த்து புத்துணர்ச்சியை ஏற்படுத்தி அபிவிருத்திக்குவேண்டியஉந்துவிசையை முடுக்கிவிட்டு ஏனோ அவர் காத்திருக்கவில்லை. அவர் வகுத்த திட்டங்கள் யாவும் பூரணத்துவம் அடையும் முன்பே எம்மைவிட்டுமறைந்து எம்மை துயரில் ஆழ்த்திவிட்டார். அவர் மறைவு எமது துரதிஷ்டமே.



அப்பெருமகனூர் தமது ஆழ்ந்து பரந்த பொருளியல், நிதியியல் ஞானத்தினுல் எமது சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முடிவுகாணும் வண்ணம் தக்க சமயத்தில் முதற்படியென வடஇலங்கையில் உருவாக்கிய, இதுவரை வட இலங்கையில் எமக்குக் கிடைத்திராத பல்வேறு உயர்ந்தரக வர்க்க வேறுபாடற்ற சேவைகளைத் திறம்பட ஆற்றிவரும் கொன்சல்டன்சி அன்ட் பினன்ஸ் அன்ட் டெவலெப்மென்ட் லிமிட்டெட் அபிவிருத்தி ஆராய்ச்சி கல்வி தொடர்பு நிலையம், மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்கள் அன்னூர் எமது விடிவுக்காக விட்டுச்சென்ற அதிகுறுகிய பாதையின் ஆரம்பப்படிகள், அர்த்தமுள்ள படிகள். செப்பமானபடிகள் அன்னூர் இல்லாத இடத்து இவை எமக்கு ஆறுதல் அளிப்பன.

### அரசியலற்ற ஸ்தாபனம்

கொன்டல்டன்சி அன்ட் பினன்ஸ் அன்ட் டெவலெமென்ட் லிமிடெட் ஒரு அரசியல், நயநோக்கற்ற, பல கோணங்களிலும் ஆலோசனை வழங்கி ஊக்குவிக்கும் ஸ்தாபனமாக விளங்குகிறது. இதன் தொழிற்பாட்டுமுறைகள் அமரரின் அனுபவமிக்க கருத்தொன்றை மிகத்தெளிவுபடுத்துகிறது. கிராமமக்களின் வலிந்த பங்கெடுப்பினுலன்றி எத்தகைய சிறந்த சமூக, பொருளாதார அரசியற் திட்டங்களுடன் தானும் அரசு கட்டுப்படுத்தப்பட்ட அல்லது அரச உதவிபெறும் ஸ்தாபனங்கள் எவையும் பொருளுடையனவாகா. மேற்படி ஸ்தாபனம் அதன் ஸ்தாபகர் காட்டியவழியில் நின்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரயோகிக்கப்படாது தேங்கி நிற்கும் மூலாதாரங்களை எவ்வாறு வளம்பெருக்கி வேலைவாய்ப்பை உண்டுபண்ணவும் மக்களிடையே சமூக, பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தவும் கூடிய வழிவகைகளில் உபயோகிக்க முடியுமென ஆலோசனைகளை வழங்குவதிலும் செயற்படு திட்டங்களை உருவாக்குவதிலும் அவற்றை நடைமுறைப் படுத்தலிலும் விசேட சவனம் செலுத்திவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள அபிவிருந்தி, ஆராய்ச்சி, கல்வி தொடர்பு நிலையம் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான அபிவிருத்தி உத்திகளை முறைப்படுத்தி அவற்றை செயற்படுத்தத் தேவையான அரசவைச் செல்வாக்கை உருவாக்குதல் மிதமான செலவில் கல்வி மேம்பாட்டுக்குப் பொருத்தமான தேர்ச்சியையும் செயற்திறனையும் அபிவிருத்திசெய்யுமுகமாக நிறைவான கல்வி வாய்ப்புகளை அளித்தல், பல்துறை அறிஞர் குழாம் அமைத்து மக்களின் பொருளாதார, சமூகமேன்நிலைக்கு உழைத்தலாகிய முக்கிய குறிக்கோள்களை ஆதாரமாகக் கொண்டு இயங்கிவருகிறது.

சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கென மற்றுமொரு ஸ்தாபனமாகிய மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட் பிரதானமாக சிறுசேமிப்பாளர்களை ஊக்குவித்து அவர்களின் சேமிப்புகளை அபிவிருத்தி முயற்சிகளில் முதலீடுசெய்தல், அதே சமயம் இன்னெருவருக்கூடாக அன்றி சேமிப்பாளர்களை நேரடியாக முதலீட்டாளர்களாக மாற்றுதல் ஆகிய இரு அம்ச நோக்கத்துக்காக அமரரால் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நோக்கில் மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட் தகுந்த அரசியல் கொள்கைகளின் உதவியுடன் இதுபோன்ற இதர ஸ்தாபனங்கட்கெல்லாம் ஒரு முன்னேடியாக விளங்க முடியுமென்பது அமரரின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

### விவசாயத்தின் முன்னேற்றம்

விவசாயத்துறை துரித முன்னேற்றம் அடைவதிலேயே எமது சுபீட்சம் பெருமளவு தங்கியுள்ளது. விவசாயக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமுகமாக விவசாயத்துக்குக் கடன்வசதி, நடைமுறைத் தகுதிகாண் ஆய்வுகள் நிர்மாணம், மேற்பார்வை. நிர்வகித்தல் போன்ற அத்தியாவசியசேவைகள் அளிப்பதற்கு ''அமரர் விவசாய அலுவல்கள் முகாமைத்துவ ஏஜென்சி'' என்னும் தனிப்பட்டதொரு ஸ்தாபனத்தையும் உருவாக்கி செயலாற்ற முன்வந்தார்.

இந் நிறுவனங்களினூடாக அமரர் செல்லையா லோகநாதனின் தன்னலமற்ற அரும்பெரும் தூய பணிகளின் தனித்துவத்தை நம்மால் உணரமுடிகிறது. இன்று அப்பெருமகனூர் எம்மிடையே இல்லை. எனினும் அன்னூர் விட்டுச் சென்ற பணிகள் மேற்படி நிறுவனங்களுக்கூடாக சிறந்தமுறையில் நடைபெறுகின்றன என்பதில் நாம் ஒவ்வொருவரும் நிறைவுபெறுவோமாக. மேலும் இந்த ஸ்தாபனங்கள் இதுவரை செயற்படுத்தப்படாத அன்னூரின் மற்றைய பல அரிய திட்டங்களையும் செயற்படுத்துவதில் ஈடுபட்டு உலகின் பல பாகங்களிலும் தழைத்தோங்கி மனிதன் ஒவ்வொருவனும் சமூக, பொருளாதார மேன்மையுற நாமும் நம்மாலியன்ற பங்கினை அளிப்போமாக. இதுவே எமது விடிவுக்குச் சூத்திரதாரியாக தம்மை அர்ப்பணித்து இறுதிவரை அயராதுழைத்த அமரரின் அமரரின் ஆத்மசாந்தி.

அமரர்

# செல்லையா லோகநாதன்

அவர்களின் ஞாபகார்த்தமாக

அன்னூரால் தாபிக்கப்பட்ட

கொன்சல்ரன்சி அன்ட் பினன்ஸ்

அன்ட் டெவலெப்மென்ட் லிமிட்டெட்

மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

அவர் மறைந்த முதலாவது ஆண்டு தினமாகிய

4-5-1982 செவ்வாய்க்கிழமை

மூடப்படும்

## பலவருடகாலம்

# பிரிந்திருந்த குடும்பம் மகிழ்ச்சியுடன் சென்றது

(யாழ்ப்பாணம்)

பல வருட காலமாகப் பிரிந்திருந்த கணவன் மனைவிக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி இணைத்து வைத்தார். யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திரு. வி. ரி. சுந்தரலிங்கம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆரோக்யா மேரியா தமது கணவர் சேவியரிடமிருந்து ஜீவனுப்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கு அண்மையில் யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திரு. வி. ரி. சுந்தரலிங்கத்தின்முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கணவனுடன் செல்ல மறுத்து ஜீவனுப்சம் பெற்றுத்தரும்படி நீதபதியிடம் மனுதார் கேட்டுக் கொண்டபோது கணவனுடன் செல்ல மறுத்த மனுதாரை மனம் மாறச் செய்த நீதிபதி பிரதிவாதிக்கும் புத்திமதி கூறி இருவரையும் இணைத்து அனுப்பி வைத்தார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி செல்வி செல்வத்துரையும் எதிர் மனுதார் தரப்பில் சட்டத்தரணி ராஜா தங்கராசாவும் ஆஜராகியிருந்தனர். (கு)

## ''கூட்டணி எம். பி.க்கள்

# தமிழீழம்பற்றி பின்னர் சிந்திப்போம் என்கிறூர்களே!''

## மட்டக்களப்பில் கோவை மகேசன்

(மட்டக்களப்பு)

''தமிழீழப் பிரகடனத்தை ஈழத்தில் பிரகடனம் செய்ய முடியுமா? என ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் எமக்குக் சவால் விட்டார். அதே பிரகடனத்தைத்தான் அண்மையில் தந்தை செல்வா நினைவு தினத்தன்று அவர்கள் முன்னிலையில் செல்வா சமாதியில் செய்துவிட்டோம்''

இவ்வாறு மட்டக்களப்புபயனியர் மைதானத்தில் நடைபெற்ற தமிழீழ வீடுதலை கழக மேதின விழாவில் கலந்துகொண்ட கோவை மகேசன் குறிப்பிட்டார்.

திரு. இரா. வாசுதேவா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. கோவை மகேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: பாராளுமன்றத்தை தமிழீழத்தின் விடுதலைப் பிரச்சார மேடையாகப் பயன்படுத்துவோம் என்று கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்குப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் இன்று தடம்புரண்டு வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றூர்கள்.

புதிய பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்குமாறு கேட்டோம். ஆனால் விழுந்தடித்துக் கொண்டு கலந்து கொண்டார்கள்.

தமிழீழம்தான் எமக்குத் தேவை அபிவிருத்தி தேவையில்லை என்று மேடைகளில்

(5ம் பக்கம் பார்க்க)

# வீதிகள் திருத்த ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு

(கோண்டாவில்)

நல்லூர் தொகுதியில் முக்கிய வீதிகளைத் திருத்துவதற்காக நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஐந்து லட்சம் ரூபாவை பன்முகப்படுத்திய வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளார்.

கோண்டாவில் கிழக்கு அண்ணங்கைவீதி, குமரகோட்டம் வீதி ஆகியவற்றிற்கு தலா ஒவ்வொரு லட்சமும் கொக்குவில் மேற்கு நீதிராசாவீதி ஒன்றரை லட்சமும் கொக்குவில் கிழக்கு கோவில்வீதி ஒன்றரை லட்சமும் ஆனைக்கோட்டை லோட்டஸ்பாலம் திருத்த ஐம்பதிணுயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# "பாராளுமன்றத்திறப்புவிழா ஜனதிபதியின் முடிசூட்டுவிழா"

## மே தின விழாவில் 'அத்த' ஆசிரியர்

(கரவெட்டி.புலோலி நிருபர்கள்)

''புதிய பாராளுமன்றம் கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தன புரவிற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டது ஜனதிபதி தனது பெயரை வரலாற்றில் இடம் பெறச் செய்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியாகும். சகல ஆடம்பரங்களுடனும் நடைபெற்ற இத்திறப்புவிழா உண்மையில் ஜனதிபதியின் முடிசூட்டு விழாவாகும்,''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி 'அத்த' பத்திரிகையின் ஆசிரியரான திரு. எச். ஜி. எஸ். ரத்னவீர, அல்வாய்–மாலி சந்தியில் நடந்த மேதின விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டக் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையின் செயலாளரான திரு. பொன். குமாரசாமி கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்

தொடர்ந்து உரையாற்றிய திரு. ரத்னவீர குறிப்பிட்டதாவது:

''சகல முக்கிய அதிகாரங்களையும் நிறைவேற்று ஜனதி என்ற முறையில் தனது கைக்குள் வைத்திருக்கும் திரு. ஜெயவர்த்தன, பாராளுமன்றத்தைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'எனது பாரபளுமன்றம்' என்று கூறுகிறார். உண்மையில் அது அவரது பாராளுமன்றந்தான். ஏனெனில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினராவது அவருடன் கருத்துவேறுபட்டால் அவர் வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுகிறார். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறமுடியாதவாறு தடைசெய்துள்ளார் தனது தனது அரசியல் சத்துராதிகளை அடக்குவதற்காக அவர்களின் குடியியல் உரிமைகளைப் பறித்தெடுத்த அவர், தமிழர் விடுதலைக் கூட்டணியினரை மௌனமாக இருக்கச் செய்வதற்காகப் பேச்சுவார்த்தைகளை இழுத்து நடத்திக் கொண்டுபோகிறார்.

''உண்மையில் பண்டா. செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராகக் கொழும்பிலிருந்து கண்டிக்குப் பாதயாத்திரை நடத்திய ஜெயவர்த்தன, சிங்கள மக்களினதோ தமிழ் மக்களினதோ நல உரிமைகளைப் பற்றி அக்கறையில்லாதவர். மீண்டும் தமிழ்மக்களின் ஆதரவுடன் பதவிக்கு வந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அவரது பிரதான நோக்கமாகும்.

''புலி தான் வாழும் காட்டை மாற்றிக்கொண்டாலும், அதன் வரிகளை மாற்றிவிடமுடியாது. திரு. ஜெயவர்த்தன நிறைவேற்றியுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் தமிழ்ப் புலிகளுக்கு எதிராக மட்டுமன்றி, சிங்களப் புலிகளுக்கு எதிராகவும் நிறைவேற்றப்பட்டது என்பதை மக்கள் உணரவேண்டும்


''இன்று நாடு அமைந்திருக்கும் கீழ்த்தரமான, கவலைக்கிடமான நிலைமைக்கு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் குறிப்பிடக்கூடிய அளவிற்குப் பொறுப்பானவர். முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு டாக்டர் என். எம். பெரேரா வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்தபோது தனது கூட்டரசாங்கத்திலிருந்து நிதிமந்திரியான அவரை வெளியேற்றினர். நோக்கம் தனது கட்சிக்கு ஆதரவாக இருந்த முதலாளிகளைத் திருப்திப்படுத்துவதேயாகும். இதன் மூலம் பிற்போக்குவாதத்தின் கைகளை ஓங்கச்செய்வதற்கு திருமதி பண்டாரநாயக்காவும் பொறுப்பானவர்.

''இன்று அபிவிருத்தியின் பெயரால் அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான பணத்தைக் கடனகப் பெற்றுவருகிறது. ஆனல் எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும் சரியான முறையில் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. இந்நிலையில் இலங்கையைச் சிங்கப்பூரின் நிலைக்கு மாற்றுவதாகக்கூறும் கூற்றில் எவ்வித உண்மையும் இருக்குமோ என்பது சந்தேகம்.

''இன்று முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளே பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற் பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இந்த நாடுகளுக்குத் தடிமன் பிடித்ததும் மூன்ரும் உலக நாடுகள் தும்மவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

''தமிழ் மக்களது பிரச்னை, மற்றும் பிரச்னைகளிலிருந்து வேறுபடுத்தித் தீர்க்கப்படக் கூடியனவல்ல. ஏனெனில் அப்பிரச்னைகள் தேசியப் பிரச்னைகளுடன் பிரிக்கமுடியாத ஒரு அம்சமாக விளங்குகின்றன. இப்பிரச்னைகளை இரு கட்சிகள் அல்லது தனிப்பட்டவர்கள் ஒன்றுசேர்ந்து ஒப்பந்தங்கள் மூலமும் தீர்க்கமுடியாது'' என்று அவர் கூறினர்.

திருமதி வேதவல்லி கந்தையா, திரு. சிவபாதம் உட்படப் பலர் பேசினர்.



சங்கீத பூஷணம் வி. கே. நடராசனின் மாணவியான செல்வி ஜெயந்தினியின் இசை அரங்கேற்றம் நாளை புதன் கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. அளவெட்டி அளகொல்லைப் பிள்ளையார் கோவிலில் அருணோதயக் கல்லூரி உபஅதிபர் திரு. வே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இல்வரங்கேற்றவிழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். திரு, பொன். முத்துக்குமாரு சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

செல்வி ஜெயந்தினி அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திரு. கே. தில்லையம்பலம் திருமதி பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வியாவார்.

# "பாரதி முழுமையானவன்"

## நூற்றுண்டு விழாவில் கல்லூரி அதிபர்

[சுழிபுரம்]

''மாணவர்கள் பாடப்புத்தகங்களுடன் மட்டுமே இன்று காலத்தை போக்குகின்றனர். இவர்களது வாழ்வு முழுமையடைய பாடநூல்களுக்கு புறம்பான பல விடயங்களைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். மாணவர்கள் பயன் படக் கூடிய கல்வியைப் பெற்றுக் கொள்ள நாம் பாரதி நூற்ருண்டு விழாவை பெரு விழாவாகக் கொண்டாட விரும்பினேம். பாரதி ஒரு பெரும் புலவன் முழுமையானவன் கவிதை மூலம் அவன் தொடாத பகுதியே இல்லை. ஆதலால் தான் பாரதி ஒரு முழுக் கவியொன்று கூறப்படுகிறது. இப்படியான ஒரு தமிழ் புலவன் எம்மிடையே வாழ்ந்தான் என்ற பெருமையை நாம் வருங்காலச் சந்ததிக்கு நினைவு கூறிபெருமையடைவோம்.''

இவ்வாறு காரைநகர் இந்துக் கல்லூரியில் கொண்டாடப்படும் பாரதி நூற்ருண்டு விழாவைத்தொடக்கி வைத்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. செ. பத்மநாதன் கூறினர்.

கல்லூரி விளையாட்டு அரங்குல் விசடேமாக அமைக்கப்பட்ட நடராசா அலங்காரப் பந்தலில் விழா தொடங்கியது. விழா ஆரம்பமாவதற்கு முன்னர் பாரதி உருவப்படம் அலங்கரிக்கப்பட்டு மங்கள இசையுடன் தமிழக அறிஞர்கள் மாணவ மாணவிகள் புடைசூழ ஊர்வலமாக காரைநகர் யாழ்ட்டன் கல்லூரியிலிருந்து கொண்டு வரப்பட்டது விழாவிற்கு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமி தலைமை வகித்தார். வித்துவான் மு. சபாரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. பி. எஸ். குமாரராமி தமது தலைமையுரையில் இன்று பாரதியின் கவிதைகள் பல்வேறு கோணங்களில் ஆராயபடுகின்றது. இந்த ஆராய்வு ஒன்றே பாரதியின் புலமைச் சிறப்புக்கு சான்ருகும் என்ருர்.

''பாரதியின் சுதந்திர தாகம்'' என்னும் பொருள் பற்றி காஞ்சிபுரம் கலாநிதி கவிஞர் மா. வரதராஜன் உரையாற்றினர். ''பாரதியின் ஆத்தி சூடி'' என்னும் பொருள் பற்றி சென்னை புலவர் பொன் தெய்வநாயகி சோதி உரையாற்றினர். வித்துவான் வி. எஸ். செல்வம் நாராயணராசா வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோரும் உரையாற்றினர் நாட்டிய நாடகமும் இடம் பெற்றது.

# தமிழ் ஈழம்பற்றி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முழங்கிய தலைவர்கள் இன்று தமிழீழம் பற்றி பின்னர் சிந்திப்போம் என்கிருர்கள்.

''வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு வருகை தரும் ஸ்ரீலங்காவின அமைச்சர்களை வரவேர்கக்கூடாது என்ற முடிவுடன்தான் தந்தை செல்வா இயக்கத்தை வழி நடத்திச் சென்ருர். ஆனல் இன்று தந்தையின் இலட்சியத்திற்கு மாருக அமைச்சர்களை வரவேற்பதற்காக எம். பீ.க்கள் தொடக்கம் அபிவிருத்திசபை உறுப்பினர்கள் வரை பலமைல்கள் சென்று கலந்துகொண்டு பாராட்டுக்களை வழங்குகின்ருர்கள். இதுதான் தந்தை செல்வாவின் இயக்கமா?

ஈழவேந்தன் பேசுகையில் ''தமிழ் மக்கள் தேர்தலில் கொண்டிருந்த இலட்சியத்தை அன்று மறுக்கவில்லை. ஆனல் ஆவர்கள் நம்பியிருந்த தமிழ் தலைவர்கள்தான் இன்று தடம்புரண்டு விட்டார்கள். இந்நிலையில் மக்கள் அவர்களை ஒருபோதும் தலைவர்களாக ஏற்கவில்லை. கருவியாக வைத்துள்ளார்கள்.

''கருவியினுல் பயன்கிடைக்காதபோது அதனைத் தூக்கியெறிந்து விடுவார்கள்.

''கடந்த பொதுத் தேர்தலில் அபிவிருத்தி எமக்கு வேண்டாம். தமிழீழம்தான் எமக்குத் தேவை என்ற கவிஞர் காசி ஆனந்தன் இன்று பாராளுமன்ற ஆசனத்தின் மேல் நம்பிக்கைகொண்டுதீவிரவாத இளைஞர்களின் போக்குகளை கண்டித்து வருகின்ருர்.

''சிவகுமாரின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை பேசுகையில்;

''பூரணத்துவம் வாய்ந்த இயக்கமாக தமிழீழ விடுதலை அணி தற்போது செயல்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் இவ்வியக்கத்தின்மேல் நம் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். எமக்கு தேர்தல் தேவை அல்ல. எமது இனத்தின் வீடுதலைதான் முக்கியம்'' என்ருர்.

திரு. இரா. வாசுதேவா தனது தலைமையுரையில் தனிநபர் பயங்கரவாதத்தை தமிழீழ விடுதலைக் கழகம் எதிர்க்கிறது. மக்கள் வெகுஜன இயக்கத்தை திரட்டினுல்தான் விடுதலை பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் நாம் செயற்படுகின்ரேம்.

மற்றும் காந்தீய இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் இராசசுந்தரம், சாருமதி உட்பட தொழிற்சங்கவாதிகள், அரசியல் பிரமுகர்களும் உரையாற்றினர். (உ)

## பாரதி விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்ருண்டு மாநாட்டின் மூன்ரும் நாள் கலை நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை திரு. எஸ். தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

'பாரதியின் கவிதைகள் பல்வேறு கோணங்களில்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று காலை இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வித்துவான் வி. எஸ். செல்வம் நாராயணராசா நடுவராகக் கடமையாற்றுவார். புலவர் க. வேல்முருகன், திரு. சி. மௌனகுரு, பண்டிதை பொன். பாக்கியம், திரு. கே. எம். செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன் தலைமைதாங்குவார்.

'பாரதியின் தேசபக்தி' என்னும் பொருள் பற்றி வித்துவான் வி. எஸ் செல்வம் நாராயணராசா சொற்பொழிவாற்றுவார். 'நமக்குத் தொழில் கவிதை' என்னும் பொருள் பற்றி காஞ்சிபுரம் மறைமலையடிகள் மன்றத்தைச் சேர்ந்த கவிஞர் மா. வரதராஜனும், 'பாரதி காட்டிய இறைவழிபாடு' பற்றி அருண்மொழியரசி கலாநிதி புலவர் பொன். தெய்வநாயகி சோதியும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

காரைநகர் இந்துக்கல்லூரி நடன ஆசிரியை செல்வி ருஜினி செல்வதுரையின் நடனமும் இடம்பெறவுள்ளது. (செ)

### துணுக்காய் பிரதேசத்தில்

# பொது விளையாட்டுமைதானம் அமைக்கப்படும்

## முல்லைத்தீவு அரச அதிபர் உறுதி

[துணுக்காய்]

''நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கும் கல்வி, சமயம், பொருளாதாரம் எப்படி அவசியமாகின்றதோ அதேபோல் விளையாட்டுத் துறைக்கும் இந்த அரசு கூடிய அக்கறை எடுத்து வருவதை நாம் பாராட்ட வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் இலங்கையில் நடைபெற்ற இலங்கை இங்கிலாந்து கிரிக்கட் டெஸ்ட் போட்டியை எடுத்துக் கூறலாம்''

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் துணுக்காய் பிரிவு உ. அ. அதிபர் பிரிவு கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கிடையிலே நடைபெற்ற விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பீட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில் ''இந்த அரசுவிளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கூடுதலான நிதிஉதவியை வழங்கி வருகிறது. துணுக்காய் பிரதேசத்தில் ஒரு பொது விளையாட்டு மைதானம் இன்மையால் இப்பகுதி விளையாட்டுவீரர்கள் பாடசாலைகளின் விளையாட்டு மைதானத்தை பாவித்துவருவதை உணர்ந்துள்ளேன். இந்நிலைமை மேலும் நீடிக்காமல் காணிகளை சுவீகரித்துபொது விளையாட்டு மைதானம் அமைக்க உடனடியாக நிதி ஒதுக்கப்படுமெனவும் உறுதியளித்தார்.

மூன்றுவது வாரம்
ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9 15
சுதாகர் – ராதிகா
சுவர் இல்லாத சித்திரங்கள்

Regal Jaffna
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
Jim Brown–Jim Kelly
Lee Van Cliff
in
Take a Hard Ride
Action Packed
Three Great
Fighting Stars
From 5–5–82
BLACK SUNDAY

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 21ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(4—5—82)

மேடம்; சிறுபிணிவாட்டும் ஆதரவு தருபவர்களிடம் பகைத்துக் கொள்ள வேண்டாம் வாழ்க்கை இன்று சுமையாகத் தோன்றும் சுமாரான தினம்.

இடபம்: நீண்ட நாள் பிரச்னையில் சமரசமுடிவு காணப்படும் தனவரவுக்கும் இடமுண்டு. பிதாவழி ஆதரவும் கிடைக்கும்.

மிதுனம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும் சொந்தமான தொழில் செய்யவும் ஆலோசிக்கலாம்.

கடகம்: வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும் சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும் அதிக வருவாய்க்கும் இடமுண்டு.

சிங்கம்: நெஞ்சத்தைப் புண்ணுக்கும் அற்ப விடையத்துக்குக்கூட பொல்லாங்கு கேட்க நேரிடும் தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள்.

கன்னி; குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும் மனதில் அமைதி குன்றும் விஷமிகள் புனைந்துரையால் ஆத்திரமும் அதிகரிக்கும்.

துலாம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை ஏற்படுத்தும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் பேச்சில் நிதானம் பெருமையைத் தரும்.

விருச்சிகம்; சுற்று வட்டத்தில் சூழ்ச்சிகள் உருவாகும் சிறு பிணிகளுக்கும் இடமுண்டு வாய்வுப் பதார்த்தங்களும் தவிர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கை நன்று.

தனு: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் போசன வாழ்வும் கிட்டும் முன்னேற்றமும் உண்டாம்.

மகரம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிட்டும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு.

கும்பம்: தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும் தனிவழியை நாடுவீர்கள் அமைதியும் பறக்கும்.

மீனம்; இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும் காதலர்கள் வாழ்வில் தடைகள் விலகும் பெற்றோர் ஆதரவும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# அரசு-கூட்டணி பேச்சுக்கள்: பல பிரச்னைகளைத் தீர்க்கும்

## பிரதி அமைச்சர் இம்புலான கருத்து

(மட்டக்களப்பு)

''மறைந்த தமிழ்த் தலைவர்களில் ஒருவரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவியை ஏற்றதனுல்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.''

இவ்வாறு மட்டக்களப்பில் சின்ன ஊறணி என்னுமிடத்தில் பாரதி மாதிரிக் கிராமத்தை நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய பிரதி உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. கே. சி. இம்புலான குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எமது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றுர்கள். அப்பேச்சுவார்த்தை மூலம் தமிழ்மக்களின் பிரச்னைகள் தீரக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது மட்டுமன்றித் தமிழ்ப் பகுதிகளும் முன்னேற்றமடைய வழிபிறந்துள்ளது'' என்றுர்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை பேசுகையில், ''இந்த அரசாங்கத்தின் காலத்தில்தான் நாடு பல துறைகளில் அபிவிருத்தி அடைந்துள்ளது மட்டுமன்றித் தீர்க்சப்படாத பிரச்னைகளும் தீர்க்கப்பட்டுள்ளன'' என்றுர்.

மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ் மக்களின் போராட்டம் தொடரட்டும் !

## மேதினக்கூட்டத்தில் மல்லவராய்ச்சி

(யாழ்ப்பாணம்)

''1981 மே மாதக் கடைசி நாட்களில் யு. என். பி. அரசின் ஆயுதப்படையும், அதன் குண்டர்களும் யாழ். நகரில் பெருந்தொகையான கடைகளையும், யாழ். பொதுசன நூல்நிலையத்தையும், ஈழநாடு காரியாலயத்தையும், யாழ். எம். பி.யின் வீட்டையும் தீயிட்டுச் சாம்பலாக்கிய செயல் மிகவும் மிலேச்சத்தனமான காட்டுமிராண்டிச் செயலாகும். இத்தகைய செயல்களுக்கெதிராகத் தமிழ்மக்கள் குறிப்பாகத் தமிழ் வாலிபர்கள் போராட்டம் நடத்துவதைத் தென்னிலங்கையில் வாழும் முற்போக்குச் சிங்கள மக்களாகிய நாம் முழு மனத்துடன் ஆதரிக்கிறேம். நீங்கள் வகுப்புவாத யு. என். பி. அரசுக்கும், அவர்களது ஆயுதப் படைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடவேண்டும் என்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில கேட்டுக்கொள்கிறேம்.''

இவ்வாறு யாழ். திறந்த வெளியரங்கில் நேற்று முன்தினம் மாலை திரு. சூ. மார்க்கு தலைமையில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் (மாவோ பிரிவு) மேதினக் கூட்டத்தில் திரு மல்லவராய்ச்சி பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''இன்றைய அரசாங்கம் எமது நாட்டை வெளிநாட்டு முதலாளிகளுக்கு ஈடுவைத்து எமது மக்களைச் சாகடிக்கின்றது. திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் தாரைவார்த்துக்கொடுக்க முயற்சிக்கிறது. அதன் மூலம் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச்சேர்ந்து உலக மக்களுக்கெதிராகச் செயல்படுகிறுர்கள். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறேம்.. குறைந்த சம்பளத்தில் தொடர்ந்து சீவிக்கமுடியாத நிலையிலேயே 1980 ஜூலை மாதம் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் 300 ரூபா சம்பள உயர்வு கேட்டு வேலைநிறுத்தம் செய்தார்கள். இன்று அவர்கள் இவ்வரசாங்கத்தால் வீதியில் விடப்பட்டுள்ளார்கள். அவர்களைப் பழிவாங்கிவிட்டு ஜே. ஆர். தார்மீகம் பேசுவது கேலிக்குரியது. பாராளுமன்றப் பாதையை நிராகரித்து, புரட்சிகரப் போராட்டப் பாதையில் அணிதிரண்டு, முதலாளித்துவ சமூக அமைப்பை அழித்து, புதிய ஜனநாயக சமூக அமைப்பைத் தோற்றுவிக்க அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கிறேம்'' என்றுர்.

# சிறுமிமீது துப்பாக்கிச்சூடு

ஜெரூசலம், மே.3

14 வயது பலஸ்தீனிய சிறுமி ஒருத்தி துப்பாக்கிச் சூட்டில் காயமானுர்.

இஸ்ரேலியரின் காரை பாலஸ்தீனியர்கள் நாசப்படுத்தியதாகவும் ஆத்திரமடைந்த அவர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது இச்சிறுமிக்கு காயம் ஏற்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது. (கு)

# தொழிலாளர் கைது

புதுடில்லி, மே. 3

புதுடில்லியில் 700 தொழிலாளர்கள் நேற்று சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டுமெனக்கோரி ஆர்ப்பாட்டம் செய்தபேபது கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் ஊர்வலத்திற்கு விதிக்கப்பட்ட தடையையும் மீறி ஆர்ப்பாட்டம் செய்தபோது பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியின் வாசஸ்தலத்திற்கு முன்னுல் வைத்து கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

# பாலம் இடிந்து விழுந்தது

(நயினுதீவு)

நேற்றுமுன்தினம் பெய்த பெருமழை காரணமாக நயினுதீவு நாகபூஷணி அம்மன் ஆலய இறங்குதுறைப் பாலம் இடிந்து விழுந்துள்ளது. ஏற்கவே பாதிப்படைந்திருந்த இப்பாலம் முற்றுகக் கடலில் விழுந்துள்ளதால் இத்துறைமுகத்தினூடாகப் பிரயாணிகளும், யாத்திரிகர்களும் செல்வதற்குத் தடையாகவுள்ளது. நீண்ட நாட்களின் பின்னர் நேற்றுமுன்தினம் பல மணி நேரமாக இங்கு பெருமழை பெய்துள்ளது.

# பிரயாணிகள் பாதிப்பு

(வவனியா)

வவனியாத் தொகுதியில் பஸ்சேவை நாளாந்தம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. போதிய பஸ் இல்லாமையால் நல்ல சேவையை ஆற்றமுடியவில்லை. பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகின்றுர்கள். குறிப்பாக கிராமத்து மக்களே இதனுற் பாதிக்கப்படுகின்றுர்கள்.

# கொள்ளை முயற்சி தோல்வி!

(மன்னுர்)

கள்ளுத் தவறணை மூடும் நேரம் பார்த்துக் கள் அருந்த வந்த இருவர் அங்கிருந்து ரொக்கப் பணத்தைக் கொள்ளையடிக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இச்சம்பவம் தலைமன்னுரில் உள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் சனிக்கிழமை இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;

சம்பவதினம் தவறணை மூடும் நேரம் பார்த்து நீண்ட கால்சட்டை அணிந்த இருவர் கள்ளுக் கேட்டனர். இவர்களுக்கு கள்ளு கொடுக்கப்பட்டது. கள்ளை அருந்திய இருவரும் கள்ளு தவறணையினுள் புகுந்து விற்பனையாளரிடம் சென்று தவறணையில் இருக்கும் பணத்தைக் கேட்டனர். பணத்தைத் தராது விட்டால் நடப்பது வேறு என்று பயமுறுத்தினர். இதனுல் பயம் கொண்ட விற்பனையாளர் தவறணையை விட்டு வெளியே ஓடிச்சென்று சத்தமிட்டார். இதனையடுத்து கொள்ளையடிக்கச் சென்ற இருவரும் பயந்து ஓடி கடை ஒன்றிற்குள் மறைந்து விட்டனர். இச்சம்பவம் பற்றி தவறணை முதலாளிக்குத் தெரிவிச்கப்பட்டதையடுத்து முதலாளியும், வேறு சிலரும் தேடுதல் வேட்டை நடததியபோதுகடை ஒன்றினுள் மறைந்திருந்த இருவரும் கண்டு பிடிக்கப்பட்டு தலைமன்னுர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்)

கலாகேசரி அ. தம்பித்துரையின் ''யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள்'' என்னும் நூல் நாளை மாலை யாழ். மத்திய கல்லூரியில் வெளியிடப்படவுள்ளது.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜாவீட்டுப் பிள்ளை
[புதிய பிரதி]

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
JUNGLE BOOK

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி
ஜெய்சங்கர்-ஜெயலலிதா நாகேஷ்
முத்துச்சிப்பி
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

மனேகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
விஜயகுமார், ஜெயசித்திரா இருவேடம்
தாயில்லா குழந்தை
5–முதல் அலைகள் ஓய்வதில்லை

RAJAH Daily at 10–30, 2–00, 4–30 7–00 and 9–30
(Jaffna) SHIRLY EATON
FUTURE WOMEN
(Strictly for Adults – Scope Color)
கண்டிப்டாக வயதுவந்தவர்களுக்கு

ராணி தினசரி 10–30, 2–00, 4–30, 7–00, 9–30
(யாழ். நகர்) கடைசி இரு தினங்கள்
TARZAN THE APE MAN
(ஈஸ்ட்மன் கலர்)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இல: 242 வில்வந்தெரு வீதி, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் இரண்டு பரப்பு சற்சதுரகாணி வீடு கட்டுவதற்கும் கடை கட்டுவதற்கும் உகந்தது. தொடர்பு M. கணேஸ் 183, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை. 3055

அளவெட்டி வடக்கு, தெல்லிப்பளை பண்டத்தரிப்பு றோட்டிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் (ருல்மடம் றோட்) 12 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தோட்டச் செய்கைக்கும், குடியிருப்புக்கும் ஏற்றது. தொடர்பு கொள்க K. P. அருணாசலம், ஈஸ்வரீ வில்லா சிறுவிளான் இளவாலை. 3046

J. V. C. வீடியோ றெக்கோடர் HR – 3660 EG Leader L S G – 11 Signal Generator உடன் விற்பனைக்குண்டு. ஸ்ரான்லி கோப்பறேசன், 79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3062

## வகுப்பு

C. E. I பகுதி I 1983 மே (லண்டன் என்ஜினியரிங்) ஆரம்பம் 07 — 05 — 82 J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3068

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பளை கொல்லன்கலட்டி காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் மரணசாதன மெழுதுப்படாத சொத்துக்களின் விடயத்தில்.

மரண மெய்தியவர்

மரணசாதன நியாதிக்கம் T/3625

தெல்லிப்பளை கொல்லன்கலட்டி தற்பொழுது லண்டன் கென்றடாட் போட்டில் வசிக்கும்வைத்திய கலாநிதி கந்தையா சிவகுமாரின் தத்துவகாரர் ஆனைக்கோட்டை சின்னப்பா கனகரத்தினம் கந்தசாமி

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982–ஆம் ஆண்டு மே மாதம் 14–ஆந் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக தாக்கப்படலாகா தென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
(ஒப்பம்)
பதிவாளர்

1982–ம் ஆண்டு பங்குனி மாதம் 19–ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 3047

## பிறந்ததின வாழ்த்து



செல்வன் ஜெயமுகுந்தன்

வல்வெட்டித்துறை ஊரிக்காடு "ஜெயா லைற்ஸ்" இளையபெருமாள் அவர்களின் பேரன், சுன்னுகம் கண்ணப்பசாமி–ஜெயதேவி தம்பதிகளின் மகன் செல்வன் ஜெயமுகுந்தன் தனது 10வது பிறந்த தினத்தை நேற்று (3–5–82இல்) கொண்டாடினார்கள். செல்வனை ஐயா, அம்மா, அண்ணு ஜெயகாந்தன் அக்கா ஜெயசிறீ ஆகியோர் வாழ்த்துகிறுர்கள். 3088

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில், கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகலிங்கம் சோமநாதனின் மரணசாதனமெழுதப்படாத சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரீ/3640

1. சண்முசேந்திரம் சீனிவாசகமும் பெண்
2. கமலாம்பிகையும் இருவரும் கொக்குவில்மேற்கு, கொக்குவில். தற்பொழுது இல. 37 அலிசன் றோட்டு, கறிங்கே லண்டன் 8 ஆகியோரின் தத்துவகாரன் நாகலிங்கம் இரத்தினசபாபதி இல.28 நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு மே மாதம் 14ஆந் நாளன்று முற்பகல் 9–00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றன.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
தா. குலஞானம்
பதிவாளர்.

1982ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 15ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரித்தது,

பொ. நவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி. 3048

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 100/– மேற்படி சங்கத்தில் கட்டி கேள்வி பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 15–05–82 ந் திகதி சனிக்கிழமைக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் "பொது முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கோ. இராமலிங்கம்
பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி,
நெல்லியடி ப.நோ. கூ.சங்கம்.
கரவெட்டி,
29–04–82.

3040

க. சி. முத்துக்குமாரசாமி
மனுதாரின் சட்டத்தரணி

## பின்முற்றுக்கும் தீர்வையின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம் முடியாமல் காலம் சென்றவர் தில்லையம்பலம் முருகேச பிள்ளையின் சொத்துக்களின் விடயமாக. தில்லையம்பலம் முருகேச பிள்ளை – வியாபாரிமூலை, பருத்தித்துறை.

— காலம் சென்றவர்.

முருகேசபிள்ளை கைம்பெண் செல்லாச்சியம்மா, வியாபாரிமூலை, பருத்தித்துறை.

— மனுதார்.

எதிராக
தத்துவ )
இல. 1067
நியாயாதிக்கம்)

1. நல்லையா நிர்மலா
2. நல்லையா நிரஞ்சன்
3. நல்லையா கைம்பெண் மீனலோசனி
4. முருகேசபிள்ளை ஜெயதேவி
5. சச்சிதானந்தம் பெண் கமலாதேவி
6. சுந்தரலிங்கம் பெண் பரிமளாதேவி எல்லோரும் வியாபாரி மூலை, பருத்தித்துறை

— எதிர்மனுதாரர்கள்

இத்தால் சகலருமறிக மேலே குறிப்பிட்ட இலக்க தத்துவ வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் மேலே சொல்லிய காலம் சென்றவரின் சொத்துக்களை நிர்ணயிப்பதற்காக பின் முற்றுக்கும் தீர்வை பதியப்பட்டுள்ளது.

எனவே எவரேனும் இதில் அச்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1979–ம் ஆண்டு ஆனி மாதம் 1–ந் திகதி முற்பகல் 9 மணியளவில் மன்றில் சமூகம் கொடுத்து பின் முற்றுக்கும் தீர்வை முழுத்தீர்வையாக ஏன் பதியக் கூடாது என்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் அவைகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப் படுகின்றீர்கள்.

1979–ம் ஆண்டு பங்குனி மாதம் 20–ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

க. விஸ்வலிங்கம்
பதிவாளர்.

26 – 3 – 8

காரணம் காண்பிக்கும் தவணை 6–5–82 டிற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
3070

# ஐ. தே. க., ஸ்ரீல. சு. க.
# எம்மைக் கண்டு பீதியடைகின்றன!"

(கொழும்பு) "மக்கள் விடுதலை முன்னணிக்கட்சிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதைக்கண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் மிகவும் பீதி கொண்டுள்ளன. ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து போட்டியிட்டாலும் மக்கள் விடுதலை முன்னணி அவற்றினை எதிர்க்கத் தயாராகவே இருக்கின்றது".

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணிக்கட்சியின் தலைவரான திரு. ரோஹண விஜேவீரா கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற தமது கட்சியின் மேதினக் கூட்

(8ம் பக்கம் பார்க்க)

## லேத்மென் தேவை

நன்கு அனுபவம் வாய்ந்த லேத்மென் உடனடியாகத் தேவைப்படுகிறுர்கள். அநுபவம் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும்.

லிங்கம் அன்ட் கொம்பனி
111, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
3064

## J. E. C.

33, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
றெயில்வே கடவைக்கு அருகில்

G. C. E. O/L 1982 Dec.
(பகல், மாலை வரை இறுதி வகுப்புகள்)
ஆரம்பம்: 5-05-82

3067

## RARE OPPORTUNITY TO FOLLOW COMPUTER PROGRAMMING COURSE IN JAFFNA

Patrician Institutes announce week end Computer Programming Course conducted by fully qualified and expierienced Instructor.

ELIGIBILITY:

(a) Pass in two subjects in G. C. E. (A/L) examination with credit pass in English in G. C. E. (O/L) examination or Professional qualification (Part or complete) in any relevant field.

(b) Pass in aptitude test held by this Institute before enrollment and

(c) Sucess in the interview held by this Institute.

Course commences on Saturday 5th June, 1982.

Apply on or before 4-00 p. m. Saturday 15th May, 1982 on forms obtainable from this office.

Very limited vacancies. Apply early and avoid disappointment.

Further details, call over or apply to:

REGISTRAR
Patrician Institutes
59, St. Patrick's Road,
Jaffna. 3063

## ஓம்னி மெற்றல் தொழிற்சாலை டொலர் காபேரேசன் உரும்பராய்

## மேற்பார்வையாளர்கள் வெற்றிடம்

மேற்படி தொழிற்சாலையில் மேற்பார்வையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரருக்கான தகமைகள் பின்வருமாறு:

(1) கல்வித்தகைமைகள்:-
க. பொ. த. (உயர்) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 4 பாடங்களில் சித்தியெய்தியிருக்கவேண்டும்.

(2) வயது:-
20—45 இருத்தல்வேண்டும்.

(3) அனுபவம்:-
தொழிற்சாலையில் மேற்பார்வையாளர்களாகவும், தொழிலாளிகளை 'கட்டுக்கோப்புக்கமைய நடத்தும் வல்லமையுமுள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது. அத்தோடு இயந்திரங்களுடன் அனுபவமுள்ளவராக இருத்தல் விசேட தகமையாகக் கணிக்கப்பெறும்.

(4) வேதனம்:-
அனுபவத்திற்கேற்ப வழங்கப்படும். தகுதிகாண் காலம் ஒரு வருடமாக இருக்கும். அதன் மேலேயே சம்பள உயர்வு நிரந்தரப்படுத்துதல் ஆகியன பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

(5) விண்ணப்பங்கள்:-
10–5–82க்குப் பிந்தாமல் அனுப்புதல்வேண்டும்.

இ. வயித்தியலிங்கம்,
237, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
3059

# பொது இடங்களில் காட்டப்படும் 'வீடியோ' திரைப்படங்கள்மீது நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்

பொது இடங்களில் வீடியோ மூலம் திரைப்படங்கள் காட்டுவோர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் யாழ். பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் அனுமதியின்றி வீடியோ' மூலம் திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதாகப் புகார் கிடைத்திருப்பதாகவும், திரைப்படக்கூட்டுத்தாபத்தின் முன் அனுமதியில்லாது, இத் திரைப்படங்களைக் காட்டுவது சட்டப்படி குற்றமாகும் என்றும், அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர் உரிமையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

## எம்மைக் . . . .

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மேதினக் கொண்டாட்டத்தையிட்டு மக்கள் விடுதலை முன்னணியினர் பிரமாண்டமான ஊர்வலமொன்றை ஹவ்லொக் மைதானத்திலிருந்து தலைநகரின் பிரதான வீதிகளுக்கூடாக ஏழு மணித்தியாலங்களுக்கு நடத்தினர். இவ்வூர்வலம் இளைஞர். யுவதிகள், சிறுவர்களை உள்ளடக்கியதாக மிகவும் நீண்டு அமைந்திருந்தது.

திரு. ரோகண விஜேவீர தனதுஉரையில் மேலும் கூறியதாவது: ''பழைய இடதுசாரிகள் ஐ. தே. க., ஸ்ரீ. ல. சு. கட்சி ஆகியனவற்றை அண்டியிருக்கின்றன. ஆனால் எமது கட்சி சுதந்திரமாக இயங்கிவருகின்றது.

''கடந்த ஆட்சிக்காலத்தில் ஊழல்கள் மலிந்திருந்தன. அவற்றை ஒழிக்கும்வகையிலேயே மக்கள் ஐ.தே. க.வைத் தெரிவுசெய்தனர். ஆனால் இன்று ஊழல்கள் குறைவதற்குப்பதிலாக அதிகரித்திருக்கின்றன.

''உபாலியினுடைய பணத்தைக் கொண்டே ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தது. இன்று ஸ்ரீமாவோவும் அவ்வாறே உபாலி மூலமாக மீண்டும் பதவிக்கு வரப்பார்க்கிறார்.

''மக்கள் விடுதலை முன்னணியால் மட்டுமே முதலாளித்துவத்துக்கெதிராகப் போரிட முடியும். மக்கள் விடுதலை முன்னணி, திடமான நேர்மையான பொருளாதார அபிவிருத்தி மிக்க ஆட்சியமைக்க மக்கள் யாவரையும், அழைக்கின்றது'' என்றார். (கி)

## ஆலய வீதியில் முதலுதவி சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவிலின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு பெருந்திரளான மக்கள்கூடும் இறுதித்தினமான 6ம் திகதி முதல் தேர் தீர்த்தம் முடியும் வரையிலான காலம் வரை, ஆலய வீதியில் சென். ஜோன் முதலுதவி சிகிச்சை முகாம் இயங்கவுள்ளது. கோவில் முகாமையாளர்கள் சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியுடன் தொடர்பு கொண்டு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மேற்படி சிகிச்சை முகாம் ஆலய வீதியில் நிறுவப்படவுள்ளது.

இப்படை அங்கத்தவர்களே வீதி ஒழுங்கு, பாதுகாப்பு முதலியவற்றுக்கும் பொறுப்பாக இருப்பர்.

## நாளை பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். தட்டாதெருச் சந்திக்கு அருகிலுள்ள கலாஜோதி சிவயோக முனியப்பர் ஆலயத்தில் முனியப்பர் விக்கிரகம் நாளை புதன்கிழமை பிரதிஷ்டை செய்யப்படும்.

நாளைக்காலை கன்னாதிட்டியிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கலாஜோதி சிவயோக ஆலயத்தில் முனியப்பர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படும். இரவு வீதி உலா நடைபெறும்.

## சர்வதேச...

1ம் பக்கத் தொடர்ச்சி)

ரோடைச்சான்றுகளை 1970ம் ஆண்டு ஆராய்ந்த பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் தற்பொழுது இதற்கான காபன் 14 ஆய்வுகூட காலக்கணிப்பு முடிவுகளை அனுப்பியுள்ளது. இதன்படி இப்பண்பாடு கந்தரோடையில் கி. மு. 500க்கும் (கி. மு.)100 க்கும் இடையில் நிலவியதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டைக்கும் இக்காலகணிப்பு பொருந்தும் என்று கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து ஆதிக்குடிகளுககுரிய மிக முக்கிய ஆதாரங்களைத்தரும் இத்தலம் கிரிக்கட் திடல் முயற்சியால் நிரந்தரமாக அழிக்கப்படுவது ஈழத்தமிழர் வரலாற்றுக்குப் பேரிழப்பாகலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் அஞ்சுகின்றனர்.

## அதிசயம் நடக்கிறது

பொது எழுதுநர் சேவை, அஞ்சல் எழுதுநர் சேவை, புகையிரத எழுதுநர் சேவை ஆகியவற்றின் இரண்டாம் வகுப்பின் 'அ' பிரிவுக்கு நியமிப்பதற்கான பரீட்சை அண்மையில் நடைபெற்றது.

இப்பரீட்சையில், 'பிரமாணங்களும் நடைமுறையும் அலுவலக முறைமையும்' எனும் பரீட்சைப் பத்திரத்தில் இடம்பெற்ற மூன்றாம் கேள்வியில், ஆங்கிலத்தில் Head of Branch என்பது தமிழில் திணைக்களத் தலைவர் என்று (பிழையாக) குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கேள்வியினால் தமிழ்ப் பரீட்சார்த்திகள் குழப்பம் அடைந்தது மட்டுமல்ல; அவர்களது புள்ளிகளும் குறைய இடமுண்டு!

★ ★ ★ ★ ★

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் நேற்று மாலை ஒரு 'அதிசயம்' நிகழ்ந்தது.

வானொலி அறிவிப்பாளர் நேற்று மாலை, நேரம் பற்றிக் குறிப்பிடுகையில், 4–55 க்குப் பதிலாக 5–55 என்று அறிவித்துவிட்டார். ஆனாலும் தவறை உணர்ந்து ஒரிரு செக்கண்டில் ''மன்னிக்கவும் இப்பொழுது நேரம் 4–55'' என்று அறிவித்தார்.

'அதிசயம்' என்ன என்றால் ''மன்னிக்கவும்'' என்று அறிவிப்பாளர் கூறியதுதான்!

பின்னர்தான் தெரிந்தது; அவர் ஒரு புதிய – பெண் அறிவிப்பாளர் என்று!

'ஊடுருவி',

## அகிம்சை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தியா மீது படையெடுத்தார். அந்த ராணுவமே இந்திய தேசீய ராணுவம் என்பது. அந்தமானில் தற்காலிகமாக இந்திய சுதந்திர அரசாங்கத்தை அமைத்துக்கொண்ட இப்படையினர் இந்திய எல்லைக்குள் அஸ்ஸாமில் இம்பாவில் புகுந்தும் போராடினர், ஜப்பான்மீது அணுகுண்டு வீழ்ந்து ஜப்பான் போரில் சரணாகதியடைந்தபின்பு நேதாஜிப்படையினரும் பின்வாங்கவேண்டியதாயிற்று. யுத்தம் நின்றதும் இப்படையினரைக் கைதுசெய்து இந்தியாவுக்கு கொண்டுவந்தனர். இத்துடன் நேதாஜி படையின் கதை முடிகிறது.

வன்முறையினால்தான் பாரதத்திற்கு பிரிட்டிஷார் சுதந்திரம்வழங்கினர் என்ற கருத்து எவ்வளவு உண்மையைக் கொண்டிருக்கிறது என்பது மேற்குறிப்பிடப்பட்ட திலிருந்து தெளிவாக தெரிகிறது.

அது நிற்க; வன்முறையைக் கொண்ட இ தே. இராணுவத்தின் தளபதி நேதாஜி கடைசியாக அவர்களுக்கு விடுத்த செய்தியில்;

அன்னியமண்ணில் அவர்கள் ஆயுதங்களுடன் போராடினார்கள். இந்தியாவுக்கு திருப்பியதும் காங்கிரஸின் தலைமையில் அதுகாட்டும் வழியில் அகிம்சைப் போர்வீரர்களாக நாட்டுக்கு சேவைசெய்யவேண்டும் என்று கூறியிருக்கிறார். வன்முறையைக் கைக்கொண்ட நேதாஜியே கடைசியில் இந்தியாவில அது பயன்தராது என்று உணர்ந்து தனது படையினரை அஹிம்சை வழியில் போராடுமாறு கூறியிருக்கிறார். நேதாஜி வன்முறையைக் கைக்கொண்டாலும் மகாத்மா காந்தியால் பெரிதும் மதிக்கப்பட்ட தேசபக்தராயிருந்தார் என்பதை நாம் இங்கு நினைவுகூர்வதும் நல்லது.

திருடன் கூட அஹிம்சையை கடைப்பிடிக்கிறேன் என்று சொல்லாம அதற்காக அஹிம்சையை குறைகூற முடியுமா? திருடனின் வேஷத்தை அல்லவா நாம் கலைக்கவேண்டும் கூட்டணியினரிடம் ஆத்திரம் இருக்கலாம். அதற்காக பரீட்சித்து வெற்றியடைந்த ஒரு தெய்வீகமான போராட்ட முறையை குறை கூறுவது பொருந்துமா?

அஹிம்சையின் ஆற்றல் இன்று மிகு குறைவு என்று பலராலும் பேசப்பட்டு வருகிறது அவர்கள் எல்லாம் அஹிம்சையை கடைப்பிடிக்க இயலாதவர்கள். அவர்கள் தம இயலாமையை மறைக்க சாமர்த்தியமாய் அஹிம்சையை சாடுகிறார்கள்.

அன்பும் அஹிம்சையும் கொண்ட புத்தரை வழிபடுகிறார்கள். அவர்கள் இப்படி பலாத்காரத்தைப் பிரயோகிப்பதும் ஆச்சரியமான விடயம்தான். ஆனாலும் தமிழ் மக்கள் எல்லாரும் ஒருமித்து ஒரேசமயத்தில் அஹிம்சையை ஓர் ஆயுதமாக்கித் தாக்குவார்களேயானால் வெற்றி நிச்சயம்

ம. செல்லத்துரை
மல்லாகம்.

## நாடு...

(1–ம் பக்கத் தொடர்ச்சி

இத்திறப்புவிழா வைபவத்தில் நீதியமைச்சின் உயரதிகாரிகள், சட்டத்தரணி எம். கே. சந்தரலிங்கம், சட்டத்தரணி கார்த்திகேசு ஆகியோருப் கலந்துகொண்டனர். (வெ)

## ஆர்ஜென்டீனா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை வாபஸ்பெற்றால் தான் யுத்தநிறுத்த பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெரு நாட்டின் யுத்தநிறுத்தத்திட்டம்பற்றித் தமக்குத் தெரியாதென்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் ஐ.நா.பிரதம செயலாளரைச் சந்தித்து சமரசத் திட்டத்தை நிராகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். பெரு நாட்டின் 7 அம்ச சமாதானத்திட்டத்தை ஆர்ஜென்டீனாவும் நிராகரித்துள்ளதாக புவனஸ் அயர்ஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானப்பேச்சுக்கள்பற்றி இருபகுதியினரும் ஆலோசித்து வரும் அதேசமயம் தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.


# V.R.V. யாழ்ப்பாணம்-திருகோணமலை

## திருகோணமலை--யாழ்ப்பாணம் பஸ்சேவை விஸ்தரிக்கப்படுகின்றது

திங்கட்கிழமை (3-05-82) முதல், மேலதிக பஸ் சேவையை ஆரம்பிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

எமது இரு சேவைகளும் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறும்:

| 0 புறப்படும் நேரம் | 0 சென்றடையும் நேரம் |
|---|---|
| யாழ். காலை 6-00<br>யாழ். மாலை 4-00 | திருமலை காலை 11-30<br>திருமலை இரவு 9-30 |
| திருமலை காலை 6-30<br>திருமலை மாலை 2-00 | யாழ். பகல் 12-00<br>யாழ். இரவு 7-30 |

ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்

யாழ்: 1. V. R. V. ரான்ஸ்போட் அலுவலகம்,
சேகரம் கட்டிடம், கொட்டடி, போன்: 8162

2. றிக்கோ சுவிற்ஸ் அன் கிறீம் ஹவுஸ் போன்: 464, 7889

திருமலை: நெஸ்கபே
401, டொக்யாட்வீதி, திருகோணமலை, போன்: 482

**பிரயாணிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ரூபா 50,000க்கு காப்புறுதி செய்யப்பட்ட சேவை! சொகுசான சேவை!**


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63–ம் இலக்க அச்சகத்தில் 1982 ஹு மே மீ 4–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.